Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 03 (18-12-1992) வெள்ளிக்கிழமை ஓசை 304

## குடும்ப பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் அனைவரும் இது வரை குடும்பப்பதிவு அல்லது தனிநபர் பதிவுகள் செய்யாதிருப்பின் உடனடியாக கிராமசேவகரூடாக அவற்றைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இதேவேளை ஏற்கனவே பதிவு செய்தவர்கள் தமது பதிவுகளை கிராமசேவகரிடம் காண்பித்து பதிவை மீளாய்வு செய்து உறுதிப்படுத்து மாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் (8 ஆம் பக்கம் பார்க்க)

# பிரச்சினையில் இணக்கம் இல்லை

# தெரிவு குழுவின் முயற்சி படுதோல்வி

## மங்களமுனசிங்கா அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு ஏகோபித்த தீர்வுத் திட்டம் ஒன்றைப் பரிந்துரைப்பதில் தோல்வி கண்டுவிட்டதாக தெரிவுக்குழுவின் தலைவர் மங்களமுனசிங்கா நேற்று உத்தியோக பூர்வமாக பாராளுமன்றத்தில் அறிவித்தார். இதேவேளை தெரிவுக்குழுவின் முயற்சி தொடரும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் செயற்பாடுகளையடுத்து கிடைத்த பெறுபேறுகள் குறித்து பாராளுமன்றத்திற்கு விளக்கிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழு சிங்களக் கட்சிகளுக்கிடையேயும் தமிழ்க் குழுக்களிடையேயும் உடன்பாடடை ஏற்படுத்துவதில் தோல்வியைத் தழுவிக்கொண்டது என்றும், இதனாலேயே இணக்கமான தீர்வொன்றை எட்டமுடியாமல் போனதெனவும் தெரிவித்தார்.

மேலும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினது முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும், எதிர்வரும் ஜனவரி மாதம் இக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பிரேமதாசா அரசு நடத்திய இந்த சமாதானப் பேச்சுவார்த்தையானது ஒரு ஏமாற்று வித்தை என இத்தெரிவுக் குழுவின் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தமிழ்க் குழுக்கள் கூறியது தெரிந்ததே.

## அளவெட்டி நோக்கி எறிகணை வீச்சு

(சுன்னாகம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று சுமார் ஐந்து எறிகணைகள்வரை அளவெட்டி பகுதி நோக்கி ஏவப்பட்டன. இதன் காரணமாக காலை தங்கள் வீடுகளைப் பார்க்கச் சென்ற பொது மக்கள் பதற்றமடைந்து அந்த இடங்களைவிட்டு அகன்றனர்.

இடம்பெயர்ந்த பொதுமக்களில் பலர் தொடர்ந்து எறிகணைத் தாக்குதல்களினால், மீளவும் வீடு திரும்ப அச்சப்பட்டு பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான ஆரம்பஉதவிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், அரசசார்பற்ற இணையமும் மேற்கொண்டு வருகின்றன.

மேலும் நேற்று காலையில் உலங்கு வானூர்தியொன்றும், அவ்ரோரக விமானமொன்றும் வலி மேற்குப் பகுதியில் பரவலாக வட்டமிட்டுத் திரிந்ததையும் அவதானிக்க முடிந்தது.

(11), (09)

## கடற்படை கப்பல் மீனவர் மீது தாக்கு

(வடமராட்சி)

பருத்தித்துறை வல்வெட்டித்துறை கடற்பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் இரண்டு வள்ளங்கள் சேதமடைந்தன. மீனவர்கள் கடலில் குதித்து உயிர் பிழைத்தனர்.

நேற்றுக் காலை 6.45 மணியளவில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான ''வீரையா சூரையா'' என்றழைக்கப்படும் பாரிய கப்பலில் ரோந்து வந்த கடற்படையினர் வல்வெட்டித்துறை, பொலிகண்டி, சற்கோட்டை ஆகிய பகுதிகளில் இழுவைப்படகு மற்றும் படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது மூர்க்கத்தனமாக பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டபோது இழுவைப்படகு உட்பட சில படகுகள் சேதமடைந்தன.

இத்தாக்குதலின் போது தமது கடற்றொழில் உபகரணங்களை கடலில் கைவிட்ட நிலையில் மீனவர்கள் கடலில் குதித்து நீந்திக் கரைசேர்ந்தனர். கடற்படையினர் கடல் பகுதியை விட்டு விலகிய பின்னர் கடலில் விட்ட படகுகளையும், வலைகளையும் என்ஜின்களையும் மீனவர்கள் சென்று மீட்டுவந்தனர்.

(யோ, 11, 09)

## தபால் பொதிகள் வரும்

(யாழ்ப்பாணம்)

இன்று பருத்தித்துறையை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற ''குமண'' கப்பலில் பெருமளவு எண்ணிக்கையான தபால் பொதிகள் எடுத்துவரப்படுகின்றன என தெரியவருகின்றது.

கொழும்பு பிரதான தபாலகத்தில் தேங்கிக் கிடந்த சுமார் 700 தொடக்கம் 800 வரையிலான தபால் பொதிகளே இவ்வாறு ''குமண'' கப்பலில் எடுத்துவரப்படுவதாக உத்தியோக பூர்வமான செய்திகள் தெரிவிக்கின்றன.

(பா)

## தனித்தனி மாகாணசபை 5 கட்சிகள் ஆதரவு

(கொழும்பு)

வடக்கு, கிழக்குக்கு தனித்தனி சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் இணக்கத்துக்கு வந்துள்ளன.

ஆறு தமிழ்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு அங்கத்தவர்களும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளும் மற்றைய கட்சிகளால் எடுக்கப்பட்ட இந்த முடிவுக்கு இணங்கவில்லை

ஐ தே. கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி தனித்தனிச் சபைகள் அமைப்பதற்குச் சம்மதித்துள்ளன. யாழ். மாவட்ட அங்கத்தினர் கே. சிறினிவாசன் மட்டக்களப்பு மாவட்ட அங்கத்தினர் பஸீர், சேகுதாவுத் ஆகியோர் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதியும வடக்கும், கிழக்கும் தனித்தனியாக இயங்க வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவ் அரசு மீது நம்பிக்கையில்லா தீர்மானம்

(டில்லி)

நரசிம்மராவ் அரசுக்கு எதிராகப் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அத்துல்விகாரி பாஜ்பாய் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நேற்று லோக் சபாவில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அயோத்தியில் பாபர் மசூதி தகர்க்கப்பட்டதைத் தடுக்கப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் உரிய காலத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அதனால் அவருக்கும் அதில் பொறுப்பு உண்டு என்றும் பாஜ்பாய் குற்றஞ்சாட்டிப் பேசினார்.

முன்னதாகவே பிரதமர் தலையிட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்செய்து பாபர் மசூதியைப் பாதுகாத்திருக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார். அயோத்திச் சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்த அவர், மூன்று மாநில அரசுகள் கலைக்கப்பட்டதையும், ராஷ்டிர சேவா சங் போன்ற அமைப்புக்கள் தடை செய்யப்பட்டதையும் கண்டனம் செய்தார்.

இவ்விவாதம் தொடர்ந்து இரு தினங்களுக்கு நடைபெறும்.

## பென்சன் வவுச்சர்

(யாழ்ப்பாணம்)

சகல ஓய்வூதியக்காரர்களுக்குமான டிசம்பர் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் யாவும் இன்று முதல் யாழ். செயலகத்தினால் விநியோகிக்கப்படுகின்றது என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## ஜேர்மன் பா. உ. கள் கொழும்பு வருவர்

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஐ.தே.க. வருடாந்த மாநாட்டில் 3 ஜேர்மன் ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

பேர்ளினிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பீற்றர் கென்றிஸ்மான், அங்காட்றிச், மற்றும் டாக்டர் றுபோல்ட் ஆகியோரே வரவுள்ளனர்.

## பயிற்சிக்கு செல்லாத பட்டதாரிகள் பதிவு செய்க

பட்டதாரிப் பயிலுனர் பரீட்சைக்குத் தோற்றி புள்ளிகளுடன் கூடிய பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களத்திலிருந்து பெற்றவர்களும், முன் சேவைப் பயிற்சிக்கென கொட்டகலைக்கு அழைக்கப்பட்டு அங்கு செல்ல முடியாது தற்பொழுதும் யாழ். மாவட்டத்தில் தங்கியிருக்கும் விண்ணப்பதாரிகளும் 1992 - 12 - 21 திகதிக்கு முன்னர் தாம் வதியும் இடம் அமைந்த பிரதி கோட்ட கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்யுமாறு யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். பெயர் பதியச் செல்லும் பொழுது தாம் பெற்ற பட்டப் படிப்புச் சான்றிதழையும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு, மன்னார் மண்ணெய் லொறிகள் இராணுவத்தால் தடுப்பு

(வடமராட்சி)

முல்லைத்தீவு மன்னார் மாவட்டங்களுக்கு மண்ணெண்ணெய் எடுத்துவந்த லொறிகள் சில வவுனியா இராணுவத் தடைமுகாமில் நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு மாவட்டங்களிலும் நியமிக்கப்பட்ட அதிகாரம் கொண்ட விநியோகத்தர்கள் எடுத்துவந்த குறிப்பிட்ட மண்ணெண்ணெய்பரல்களுக்கு கூட்டுப்படை தலைமை அலுவல

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு. DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### வைக்கோல் விற்பனைக்கு

வைக்கோல் உடன் விற்பனைக்கு தொடர்பு: K. அருணாசலம், ஆசிரியர், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. (3797)

### எம். ஜி. ஆர். திருமண சேவை

வெளிநாடுகளில் பிரபல தொழில் புரியும் ஆண்களுக்கு பொருத்தமான மணமகள்கள் தேவை இலங்கை, சிங்கப்பூர் திருமணம். வே. புண்ணியமூர்த்தி, புத்தூர் சந்தி, மீசாலை. (3367)

### நீ மோல் கிருமி நாசினி

ஒரு சிறந்த கிருமி நாசினி. மலசல கூடத்திற்குப் பாவிக்கச் சிறந்த பலன். அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது. விலை ரூபா. 70 மட்டுமே.
-மில்க்வைற்- (சி/5599)

### இராகு - கேது மாற்றம்

வாக்கிய பஞ்சாங்கப்படி 06 - 01 - 1993 இல் நிகழும் ராகுகேது மாற்றப், பலனறிய, ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட பெயரமைக்க வேலணை சோதிடர் V. A. சிவராசா 152 B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (3803)


### ரிசேவ் பொலிசாருக்கு மாதச் சம்பளம்

முப்பதாயிரம் ரிசேவ் பொலிசாருக்கு விரைவில் மாதச் சம்பளம் வழங்கப்படவுள்ளது. தற்போது வேலை நாள் அடிப்படையில் வேதனம் வழங்கப்படும் ரிசேவ் பொலிசார் இதன் மூலம் பயனடையவுள்ளனர், பொலிஸ் மா அதிபரின் புதிய திட்டப்படி இவர்களுக்கு வருடாந்த சம்பள உயர்வு, சீருடை வசதி என்பனவும் வழங்கப்படவுள்ளன.

## ஆட்சிக் கலைப்பை இடதுசாரிகள் வரவேற்பு

[டில்லி]

பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சி செய்த மூன்று மாநிலங்களின் அரசாங்கங்களைக் கலைத்தனத தேசிய முன்னணியும், இடதுசாரிக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட், மாக்சிஸ்ட்கம்யூனிஸ்ட கட்சி ஆகியன வரவேற்றுள்ளன. அகில இந்திய சிறுபான்மையினர் முன்னணியும் வரவேற்றுள்ளது

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் மூன்று மாநில அரசுகள் கலைக்கப்பட்டதை வரவேற்றுள்ளது

பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியிலுள்ள மூன்று மாநில அரசுகள் கலைக்கப்பட்டது நியாயமானது என்று மாக்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் நல்லசிவன் அறிக்கையொன்றில் கூறியிருக்கிறார்.

மூன்று மாநில அரசுகளைப் பதவி நீக்கம் செய்தது சரியானது என்றும். இது தக்கசமயத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றும் பாட்டாளி மக்கள்கட்சித் தலைவர்களில் ஒருவரான பண்டுருட்டி ராமச்சந்திரன் குறிப்பிட்டிருக்கின்றார்.

பாரதீயஜனதாக்கட்சி அரசுகளைக்கலைத்தது சரியானமுடிவொன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் எஸ். வீரமணி கூறியிருக்கிறார்.

## மட்டுநகர் ஈன்ற நாட்டுப்பற்றாளன் கட்டுடலம் வீழ்த்திய அகால நினைவாக

முகிழ்வு: 28 — 02 — 1965



உதிர்வு: 13 — 12 — 1992

### சீனித்தம்பி யோகநாதன்

(யாழ்/பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையின் 4 அம் வருட மாணவன்)
(நாவற்குடா மட்டுநகர்)

நாட்டில் இன்று நடக்கின்ற
போர் வெயிலின்
சூடு தணிப்பதற்கு
சுழன்றாடி வேலை செய்யும்
நாட்டுப்பற்றாளர்
பலருள்ளே நீயொருவன்...!
ஆனையிறவின் போர் அமளிதுமளிகளில்
காயப்பட்டவரைக்
காப்பதற்கும்...,
களநெருக்கம் தவிர்ப்பதற்கும்...
ஓயாது நீ செய்த வேலைகளைப்
பலரறிவர்
யோகநாதா...!!!
அகால மரணங்கள் நிறைந்த எம்மண்மீது
அகாலமாய் நீயும்...
ஆயுளைச் சுருக்கிவிட்டாய்.
காலக்கொடுமையிது.
ஆனாலும்,
உன்நினைவு காவும் நெஞ்சங்கள்
தமிழீழ மண்ணிலின்றும்

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு
தென்மராட்சிக் கோட்டம்

[3805]

## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-18

1984-ம் ஆண்டு இதே தினத்தில் புல்மோட்டை, சிறிபுரச்சந்தியில் சிறிலங்காப்படையினரின் வாகனம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

லெப். கடாபி (வேலுப்பிள்ளை கிருஸ்ணானந்தன்- 5-ம்வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு)

லெப். ஐங்கரன் (சுப்பிரமணியம் நற்குணம் - திரியாய் - திருகோணமலை)

மன்னார்- பரப்புக்கடந்தான் பகுதியில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையில் விழுப்புண் அடைந்த நிலையில் தன்னைத் தானே சுட்டு வீரச்சாவெய்திய-

லெப். நிதி (கிறிஸ்துநாதன் சுதாகர் - பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

1986-ம் ஆண்டு மட்டு- தாண்டியடிப்பகுதியில், சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

லெப். கமலன் (சிவசுந்தரம் இராசநாயகம்- கோவில் வீதி, கல்முனை- 02- அம்பாறை)

இதே பகுதியில் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

ரவிக்குமார் (மயில்வாகனம் புண்ணியமூர்த்தி- தம்பிலுவில் - 01- அம்பாறை)

1987ஆம் ஆண்டு கட்டுவன் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

பன்னீர் (நாகலிங்கம் பன்னீர்ச்செல்வன் - ஏழாலை தெற்கு- யாழ். )

மந்துவில் பகுதியில் எமது முகாமை இந்தியப்படையினர் சுற்றி வளைத்த போது வீரச்சாவெய்திய-

கணேஸ்

கோண்டாவில் காரைக்கால் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய

தனுஸ் (வைத்திலிங்கம் வசீகரன்- தெல்லிப்பழை- யாழ். )

ஆனைக்கோட்டை, கூழாவடிப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய-

ஜெராட் (கண்டி)

ரவி (பிரகாஷ் ரவிக்குமார்- கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி, யாழ். )

1990ஆம் ஆண்டு மட்டு- பட்டிருப்புப்பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பொறிவெடி விபத்தில் வீரச்சாவெய்திய- எமைப்பிரிந்த-

2-ம் லெப். வோல்டர் (கந்தசாமி சிவப்பிரகாசம்- குருக்கள்மடம், மட்டக்களப்பு)

திருக்கோணமலை நகர், சமாதிப்பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டு ரயர்போட்டு எரிக்கப்பட்ட - குழந்தைகள், பெண்கள் உட்பட 5- தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியா- பேயாடிக்குளம் பகுதியிலிருந்த இராணுவத்தினர் வெளியேறி வந்த போது வழி மறித்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

குஞ்சன் (சின்னராசா அருந்தவராசா- கூழாங்குளம் - வவுனியா)

2-ம் லெப். தப்பித்துரை (சின்னத்துரை நற்குணராசா- மாங்குளம்- வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5601]


**நம்பிக்கை நாணயம்;**

நிறைந்த தொழிலே; நாட்டிற்கும் வீட்டிற்கும் உயர்வு தரும்......

சிறுப்பிட்டி மக்களின் உடனுக்குடனான தேவை கருதி

❁ அரிசி தீட்டல் ❁ தூள் அரைத்தல் ❁ நெல் உடைத்தல்

❁ உழுந்து திரித்தல் ❁ மாவு அரைத்தல்.... மேலும் குரக்கன், பயறு

போன்ற சகல பொருள்களும் உடனுக்குடன் அரைத்துக் கொள்ள உடன் நாடவேண்டிய இடம்

## ஸ்ரீ கிருஸ்ணாஸ் கிறைன்டிங் மில்

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி.

பதிவிலக்கம்- 12656

உரிமையாளர்:
ஸ்ரீ. ஸ்ரீவிஜயகுமார்

(சி-5603)




தமிழ் மண்ணில் அமைதி காக்கவென்று பசுத்தோல் போர்த்திய நரிமாதிரி இந்திய கூலிப்பட்டாளம் புகுந்தது. பல அட்டூழியங்கள் புரிந்து அழிக்க வந்த படையாகமாறியது தமிழீழமக்களின் குருதி தமிழீழ மண்ணைசிவக்கச்செய்தது. இந்திய இராணுவத்துடன் புலிவீரர்கள் ஆவேசமாக போராடி இந்திய இராணுவத்தை திணறவும் திகைக்கவும் செய்தார்கள்- இதற்கெனப்பலர்பலதியாகங்களைப் புரிந்தார்கள்.

இதனால் கொதிப்படைந்த இந்திய இராணுவம் தமிழீழ மக்களை வெறியாட்டம் ஆடியது. பலமக்களை வெட்டியும் சுட்டும் கோரத்தாண்டவம் ஆடியது. பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளானார்கள். இத்தனை கொடுமைகளையும் கண்டு துடித்தான் மகலன்.

மகலன் வடமராட்சி அல்வாய் என்னுமிடத்தை பிறப்பிடமாககொண்டவன் சொல்லபோனால் இவர்கள் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. இவனுக்கு ஒரு அண்ணனும் இரண்டு தங்கைகளும் இருக்கிறார்கள். இவன் இயக்கத்திற்கு போவான் என்று அவன் வீட்டிலோ ஒருவரும நினைத்திருக்கமாட்டார்கள். சுருக்கமாக சொல்லப்போனால் அவன் ஊரில்கூட ஒருவரும் எண்ணிப் பார்த்திருக்க மாட்டார்கள். அவன் அமைதியான அடக்கமான சுபாவம் கொண்டவன் அவன் படிப்பில்கூடகெட்டிக்காரன் அவனதுவீட்டுப் பெயர் ரதீஸ்குமார்.

1988 ஆம் ஆண்டு இயக்கத்தில் இணைவதற்காக பலஇந்திய இராணுவ முகாம்களுக்கு மத்தியிலும் மக்களோடு மக்களாக நிற்கும் புலிகளை கண்டு தன்னையும் இயக்கத்தில் இணைத்துக் கொள்ளும்படி கோரினான் ஆனால்அவர்கள் உடனடியாக இயக்கத்திற்கு சேர்த்துக் கொள்ள மாட்டோம் எனத் தெரிவித்து விட்டனர் ஆனால் அவன் மனம் தளரவில்லை. அப்போதைய நெருக்கடியில் இயக்கத்திற்கெனப்பலஉதவிகள் செய்தான். தன்செயற்பாடுகளின் மூலம் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொள்ளுவதற்கு தகுதியைப் பெற்றான்.


இவன் தன் தாயை தன் குடும்பத்தை எவ்வளவு நேசித்தானோ அவ்வளவிற்கு தன் மண்ணையும் நேசித்தான். 1989 ஆம்ஆண்டு தன்னைமுழுமையாக இயக்கத்துடன் இணைத்துக் கொண்டான். மணலாறு காட்டுக்கு இவன் பயிற்சிக்காக அனுப்பப்பட்டான் அங்குஇவனுக்கு மகலன் என்று பெயரும் சூட்டப்பட்டது. உலகத்தை கடல் மூலம் சுற்றி சாதனை படைத்த மாலுமிஒருவரான மகலனைப் போன்று இந்த மகலனும்எல்லாச் செயல்களிலும் சிறந்து விளங்கினான்.

பயிற்சி முகாமில் பயிற்சி எடுக்கும்போது நாளாந்தம் பொருட்கள் தூக்க வேண்டி வரும் அப்போது சிலபாரமான பொருட்களை சிலர் தூக்க மாட்டார்கள் அப்படியான கஷ்டமானநேரத்திலும் கூட தன்தோழர்களுக்குஉதவுவதுஇவனது உயர்ந்தகுணத்தைகாட்டும். மற்றவர்கள்தூக்கமுடியாமல் இருந்தசாமான்களை இவன் மிக இலகுவாக தூக்குவான். தாங்கள் தூக்க முடியாத சாமான்களைஇவன் தூக்குகிறானே தங்களுக்காக என்று மற்றவர்கள் இவனில் மிகுந்த அன்பு வைத்தனர்.

ஆனால் இவனோ யாரைக் கண்டாலும் அன்பாக சிரித்து கதைப்பதற்கும் போராளிகளை இலகுவில் பழக்கம்பிடிப்பதிலும் இவனுக்கு நிகர் யார் இருக்கிறார்கள். என்று நான் யோசிப்பதுண்டு. இவன் எல்லோரிலும் பார்க்க வித்தியாசமானவன் மற்றவர்களுடைய துன்பத்திலும், இன்பத்திலும் கஷ்ரத்திலும் கலந்து கொள்வான் இவனோடு அன்பாக பழகியவர்கள் இவனைமகலன் அண்ணா சாப்பிட்டு விட்டாரா அவர் சாப்பிடாமல் நாங்கள்சாப்பிடமாட்டோம்என்று அடம்பிடித்து சாப்பிடாமல் விட்டு விடுவார்கள். அவனது அன்புத் தொல்லை தாங்காமல் அவன் அவர்களுடன் சாப்பிட அமர்ந்து விடுவான். இவனோடு அவர்கள் அவ்வளவு பாசம்

நான் இவருடன் பழகிய காலத்தில் இவரது சிரித்த அன்பான முகத்தை தவிர கோபமாக இருப்பதை காணவேயில்லை. நித்திரையில்கூட இவரது முகம் சாந்தமாகவே இருக்கும்.

பயிற்சி முகாமில் நடந்த நிகழ்ச்சிகளிலும் விளையாட்டுகளிலும் பங்குபற்றி பல பரிசில்களைவாங்கினான். இவன் நன்கு திறமையாகவும் தண்டனை வாங்காமலும் இருந்ததினால் பயிற்சி மாஸ்ரர் மற்ற



கப்டன் மதியழகன்

வர்களுக்கு இவனை ஓர்உதாரணமாக அடிக்கடி சொல்லுவதுண்டு.

இந்தியஇராணுவம் தமிழீழ மண்ணை விட்டு வெளியேறினதும் இவனது பணிகள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தன இரண்டாவது ஈழப் போர் ஆரம்பித்ததும் இவன்மோட்டார்எறிகணைப் பயிற்சிக்கு தெரிவு செய்யப் பட்டான். அந்தப்பயிற்சியில் மிகவும் திறமையாக நடந்து கொண்டான். கொக்காவில் இராணுவமுகாம் தகர்ப்பிற்கு இவன்முக்கிய பங்குவகித்தான் பின்பு எல். எம். ஜி பயிற்சி பெற வாய்ப்பு கிடைத்தது. அதை மிகவும் திறமையாக முடித்துக் கொண்டதும் இவனுக்கு எல். எம். ஜி. வழங்கப்பட்டது.

1991 -ம் ஆண்டு ஜூலை மாதம் ஆனையிறவுப் பெரும் போர் தொடங்கியது. அந்தச் சண்டைக்கு மேஜர் ரெட்டி அண்ணாவின் குறூப்பில் சென்றான். 11-07-91 அன்று இரண்டாம் நாளாகத் தடை முகாம் மீது எம்மவர்கள் கள் தாக்குதல் தொடுத்தார்கள். அந்தத் தாக்குதலில் எமது தரப்பில் இழப்பு கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. எமது அறுபத்திரண்டு தோழர்கள் வீரச்சாவெய்தினர். இதனால் அந்த முகாமை விட்டுப் பின்வாங்க வேண்டி இருந்தது.

இருப்பினும் வீரமரணமடைந்த தோழர்களின் உடல்களை மீட்டெடுப்பதில் மகலன் தீவிரமாக இருந்தான். எங்களுடன் உண்டு, ஒரே பாயில் படுத்து. ஒன்றாகவே பகிடி விட்ட தோழர்களல்லவா அவர்கள். அவர்கள்தமிழ் மண்ணிற்காகத் தம் உயிரை அர்ப்பணித்தவர்கள். இவர்கள் இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட வேண்டியவர்கள். அவர்களது உடலைக் கொலைவெறி கொண்ட சிங்களவன் தொட விடலாமா? முடியாது. இதனால் மகலன் கடுமையாக இருந்தான். அதற்கேற்ப அடுத்த நாள் காலை வரை உறக்கமின்றி இந்தப் பணியிலே கண்ணும் கருத்துமாக நின்றான். ''மச்சான் டேய் இவன் சிங்களவனுக்கு எங்கட பொடியளுண்டை பொடியை தொட விடக்கூடாது'' என்று கடுமையாகச் சொன்னான் அவனது இந்த வார்த்தையில் உறுதியும், நம்பிக்கை, தேசப்பற்று போன்றவை நிறைந்து காணப்பட்டது. இந்த இவனது முக்கிய பங்கை அங்கு நின்ற எந்த ஒரு போராளியும் மறக்க மாட்டான்.

பின்னர் கடலால் தரையிறக்கப்பட்ட படையினரோடு கட்டைக்காடு பகுதியில் நடந்த சண்டையில் தனது பங்கை ஆற்றினான். 21-07-91 அன்று கட்டைக்காட்டில் நூறு இராணுவத்தினரை ஊடறுத்துத் தாக்கியதில் (தமிழீழத்தில் முதல் தாக்குதல்) இவனது பங்கு முக்கியமானது இதில் 90 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஐம்பது நவீன ரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. இந்தச் சண்டையில் இவன் பங்கு மிக முக்கியமானது. பின்பு சுமார் ஒரு வருடத்தின் பின்னர் இதே பகுதியில் நடந்த பலவேகய இரண்டு இராணுவ நடவடிக்கையின்போது எதிரியுடன் மோதினான்.

இவனுக்கு பின்பு மதியழகன் என்று பெயர் மாற்றப்பட்டது. இவனது திறமைகளைக் கண்ட பொறுப்பாளர் இவனுக்கு பீ. கே. எல். எம். ஜி கொடுத்தார். இவன் தன்னுடைய ஆயுதத்தில் அதிக பற்று உள்ளவன். தனது சொத்தாகவே அதைக் கருதினான்,

மண்டலாய் பிள்ளையார் கோவிலடியில் நான் நகாவலரண்கள் தகர்க்கப்பட்டு பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். வரலாறு படைத்த கட்டைக்காடு ஆயுதக் கிடங்கு கைப்பற்றிய சண்டையிலும் பங்கு பற்றிச் சிறப்பாகச் செயற்பட்டான்.

எதிரியுடன் மோதும் போது மட்டுமல்ல வேலை செய்வதிலும் போட்டியாகவே செய்வான். ஒரு நாள் இவன் இரண்டு தோழர்களுடன் பங்கர் போட்டியாக வெட்டினான். முதலாவதாக இவனே வெட்டி முடித்தான். எந்த வேலையிலும் சுறுசுறுப்பாகவும் விரைவாகவும், மற்றவர் மனதைக் கவரக் கூடிய வகையிலும் செயல்படுவான். இதே வேளை, தனது அனுபவங்களையும். தான் அறிந்த செய்திகளையும் மற்றவர்களுக்கு தெளிவாக விளங்கப்படுத்துவான். இதனால் இவனை அன்பாக இவனது தோழர்கள் மாஸ்ரர் என்று கேலி செய்வார்கள்;

09-11-1992 அன்று கிளாலி கடலில் பயணம் செய்ய வேண்டிய வந்தது. அன்று இவன் தன் தோழர்களுடன் என்றுமில்லாதவாறு பகிடி விட்டுக்கொண்டிருந்தான். பின்பு படகில் ஏறும் போதும் சிரித்துக்கொண்டேஏறினான். ஆனால் கடலில் சிறிதுதூரம் சென்றதும் எதிரியின் படகு நெருங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது. அப்போது இவன் பீ. கே. எல். எம். ஜி இயங்கியது. பக்கத்தில் நின்றவர்களும் தாக்கத் தொடங்கினார்கள். கூலிக்கு கும்மாளம் அடிக்க வந்த படையல்லவா? எதிரி பின்வாங்கினான். ஆனால் சுடுவதைநிறுத்தவில்லை. எங்கிருந்துதோ வந்த எதிரியின் குண்டொன்று மதியழகனின் (மகலன்) தலையை பதம் பார்த்தது. அக் குண்டு மகலனை எம்மை விட்டுப் பிரிந்தது அவன் தனது மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் வீரச்சாவை ஏற்றுக் கொண்டான்.

மகலன் வீரச்சாவடைந்த செய்தியை கேட்ட எங்கள் மனம் ஒரு கணம் திடுக்குற்றது. மகலனின் வீரச்சாவை எங்கள்மனம்தாங்கிக் கொள்ளாதுதத்தளித்தது. மகலனின் வீரச்சாவு ஒரு முழு பால் நிலவை கரு முகில் மறைத்தது போன்ற ஒரு உணர்வு.

எனினும் அவனது கைப்பிடிக்குள் அடங்கியிருந்த பீ. கே. எல். எம். ஜி மீண்டும் முழங்கும்: தமிழீழம் என்று எமது தேசப்படம் குறிக்கப்படும் நாள் வரையில் அதன் முழக்கம் ஓய்ப்போவதில்லை.

தேசம் எரிகையில் சிவந்த
கண்ணுடன்
பொங்கியே எழுந்தவன்-
இவன்
பாசம் அழியாத தமிழீழத்தில்
எதிரியின்
காலடியை அதிரவைத்தனனே-
மதியே
நீ சாகவில்லை ?-இல்லை
சரித்திரமாகி விட்டாய்

-சரவணன்

# தெரிவுக்குழு ஓர் அரசியல் தற்கொலை

மு.திருநாவுக்கரசு

I

கேள்வியும் நானே, பதிலும் நானே என்பதாய் தெரிவுக் குழுவின் விவகாரம் அமைந்தது.

கொழும்பு நகரில் சுமார் ஓராண்டு காலமாக மங்கள முனசிங்க தலைமையில் பாராளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர்கள் கூடினார்கள் கடதாசித் துண்டுகளில் எதையோ கிறுக்கினார்கள். தேநீர் பருகினார்கள் சிற்றுண்டிகளை உண்டார்கள் இறுதியாகத் தாம் கிறுக்கிப் பழகிய கடதாசித் துண்டுகளை எடுத்துக் கை துடைத்தார்கள். பின்பு குப்பைத் தொட்டிக்குள் அதனை வீசினார்கள்.

எப்போதும் போலவே இதுவும் ஓர் ஏமாற்று ஆனாலும் எப்போதும் போலன்றி இதில் ஒரு தனித்துவமான வரலாற்று முக்கியத்துவமும், சுவாரசியமும் உண்டு

பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தங்கள் சர்வகட்சி மாநாடு, வட்டமேசை மாநாடு இவையெல்லாம் எப்படி இறுதியில் ஒரு ஏமாற்றாகினவோ அப்படியே தெரிவுக் குழு விவகாரமும் ஒரு ஏமாற்றாகி விட்டது.

தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாகக் கூறிச் சிங்களவர் ஒரு தெரிவுக் குழுவை உருவாக்கினார்கள் தமிழரின் சக்தியாகவும், பிரதிநிதிகளாகவும் காணப்படும் புலிகள் இக்குழுவைப் பொருட்படுத்தவுமில்லை, குறுக்கிடவுமில்லை, அதிற் கலந்து கொள்ளவுமில்லை. ஆனால் எட்ட நின்று பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

தெரிவுக் குழு விவகாரத்தில் புலிகள் எதையாவது குழப்பினார்கள் என்று யாரும் எதுவும் சொல்வதற்கில்லை. தெரிவுக் குழுவை உருவாக்குமாறு புலிகள் கேட்டதுமில்லை. தாங்களே உருவாக்கி, தாங்களே கூடி, தமிழருக்கு உரிய உரிமை கொடுக்கத் தாங்கள் தயாரில்லை என்பதைத் தாங்களே அறிவித்தும் விட்டார்கள். இத்தகைய நிகழ்வுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவமும், சுவாரசியமும் உண்டு.

சமாதானத் தீர்வுக்கு தமிழர் தயாரில்லை என்று தமிழர் பக்கம் பழி போட முடியாதவாறு தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் தமிழர் பக்கமிருந்து குழப்பப்பட்டன என்று சொல்ல இடமில்லாதவாறு, தமிழரின் தேசிய இன உரிமையைத் தாம் மறுப்பவர்கள் என்பதைச் சிங்களவர் உலகிற்கு அப்பட்டமாகக் காட்டிய விவகாரமே தெரிவுக் குழு விவகாரமாகும்.

II

தெரிவுக் குழு அமைக்கப்பட்டமையும், அது எடுத்த முடிவும் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஒரு தற்கொலைச் செயலாகவே உள்ளது பிரேமதாஸா எதிர்பாராததே. இதில் நடந்தது. அரசாங்கத்தை மாற்று வழியற்ற நிலைக்குத் தெரிவுக்குழு தள்ளியுள்ளது.

பிரேமதாஸா எதிர்பார்த்தது இதுதான்; இராணுவம் புலிகளை ஒடுக்கும் கட்டமும் தெரிவுக் குழு மாகாணத் தீர்வைப் பரிந்துரைக்கும் கட்டமும் ஒன்றோடொன்றுஇணையும்போது தமிழரின் தலையில் ஒரு ''தீர்வைத்'' திணிக்கலாம் என்றுதான். ஆனால் யதார்த்தம் அப்படி அமையவில்லை.

பிரேமா எதிர்பார்த்தபடி புலிகள் ஒடுக்கப்படவில்லை. பிரேமா எதிர்பார்த்தபடி தெரிவுக் குழு மாகாணத் தீர்வுக்கு வந்தது இப்போது இரண்டும் ஒன்றோடொன்று சந்திக்கவில்லை. இந்நிலையில் அவர்களின் கணிப்பீடும், தெரிவுக் குழுவின் தீர்வும் அர்த்தமற்றதாகிறது. இதன் மூலம் தெரிவுக்குழு ஒன்றை செய்து விட்டது. அதாவது,

(06 ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# களைகள்

துருவன்

விறாந்தையில் சைக்கிள் நிற்பாட்டும் சத்தம் கேட்டு சமையல் அறையில் இருந்து அம்மா கேட்டாள்.

''...என்ன பிள்ளை! இவ்வளவு நேரம்...... சாப்பாடும் இல்லாமல் நின்றிட்டு வாறாய்...?''

''...ஸ்ருடியோவிலை சின்ன அண்ணையின்ர படத்தைக் கேட்டனான்... இன்னும் மூண்டு நாளிலை எல்லா வேலையும் முடிசசுத் தாறம் எண்டு சொல்லுகினம்...'' சொல்லியவாறு சமையல் அறையை நோக்கி நளினி வந்தாள்.

''.. அம்மா! சின்ன அண்ணையின்ரை நினைவு தினத்திற்கு பள்ளிக்கூட வாசலிலை பெரிய முழுப் படத்தை பள்ளிக்கூடக் கணக்கா வைக்கப் போயினம். அந்தப் படத்தைப் பார்த்தனான்... சரியாச் சின்னண்ணை உயிரோடை வந்தமாதிரி... கண்களில் பாசம் பிரகாசமாக ஒளிவிட நளினி சொன்னாள்.

...ம்... ம்... பள்ளிக்கூட வாசலிலும், முச்சந்திசளிலும் அவன் படமாகத் தொங்கிக் கொண்டிருக்க... நான்... நளினிக்கு விளங்கி விட்டது. இனி, அம்மாஒரு வேலையும் செய்யாமல் சின்ன அண்ணயை நினைத்து அழுது கொண்டிருக்கப் போகிறா என்று.

நளினியின் சின்னண்ணை மணி, ஆறு வருடங்களுக்கு மேலாக இயக்க செயற்பாடுகளில் ஈடுபட்டு சென்ற தை மாதம் நடந்த மன்னார் மோதலில் தன்னுயிரை விட்டு மா வீ ர னா ன வன். அவனது முதலாவது நினைவு தினம் வருகிற தை மாதம் வருகிறது அம்மா விரல் நுனியில் துக்கத்தையும், கண்ணிறைய கண்ணீரையும் எந்த நேரமும் கொட்டி விடத் தயாராகத்தான் இருப்பாள்.

சின்ன அண்ணையின் நினைவில் இருந்து அம்மாவைத் திருப்ப நளினி கேட்டாள்... 'அம்மா! பெரியண்ணை சனிக்கிழமை கொழும்பு போகப் போறன் என்றவர்... உடுப்புகள் தோய்க்கச் சொன்னவரோ?''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அம்மா சொன்னாள்... ''.. ஓம் பிள்ளை! மறந்து போனன் கொடியிலை கிடக்கிற மூண்டு சோடி உடுப்பையும் தோய்க்கச் சொன்னவன் .. என்றபடி அம்மா சமையலைத் தொடர்ந்தாள்

நளினி பெரியண்ணையின் அறைக்குள் சென்று கொடியில் கிடந்த உடுப்புகளை உருவி எடுத்தாள். 'ஜீன்ஸ்' ஒன்று பொத்'தென கீழே விழுந்தது. அது விழுந்தபோது பலத்த சத்தமாக இருந்தது. நளினிக்கு மனம் 'திக்'கென்றது.

''...அண்ணையுடைய 'பொக்கற் றேடியோ' ஜீன்ஸ் பைக்குள் கிடந்ததோ... உடைந்து நொருங்கி... கடவுளே அண்ணைக்கு என்ன மறுமொழி சொல்லுவன்...'' எண்ணியவாறு ஜீன்ஸ் பையை மேலாகத் தடவிப் பார்த்தாள்.

...பலமான சந்தேகம் மூளையை மின்னலெனத் தாக்கியது .. ...இது நிச்சயமாகப் பொக்கற் றேடியோ இல்லை.. அபப... அவளுக்குச் சந்தேகம் வலுத்தது பைக்குள் கையைவிட்டு எடுத்தாள். அவள் நினைத்தது சரிதான். அது ஒரு 'கைத்துப்பாக்கி' ''அண்ணைக்கு ஏன் துவக்கு... அண்ணையும் ஒருவேளை சின்னண்ணை மாதிரி... சீ ச்.. சீ இருக்காது இரகசியமாக எப்படி இயக்கத்திலை இருக்க முடியும்... பத்து வருசங்களுக்கு முன் எண்டால் அது சரியாய் இருக்கும்... இபப எல்லாம் வெட்ட வெளிச்சம்தானே...'' என்று பலவாறாக சிந்தித்தபடி அம்மாவைக் கூப்பிட்டாள்.

அம்மா கையின் ஈரத்தைச் சேலைத் தலைப்பில் துடைத்தபடி வந்தாள். நளினி காட்டிய கைத்துப்பாக்கியைப் பார்த்தவுடன் வெலவெலத்துப் போனாள்.

.. சேலைத் தலைப்புள் மறைந்து நின்று வேடிக்கை காட்டிய மணி .. பெரியவனாக வளர்ந்து... படிப்பில் மிகக் கெட்டிக்காரனாகி...... விளையாட்டில் வீரனாகி... ஒருநாள் போராளியாகி துப்பாக்கியுடன் வந்தபோது எப்படி நடுங்கினாளோ அதிலும் பார்க்கப் பல மடங்கு பெரிதாக இப்போது நடுங்கினாள். சின்னவன்தான் போய் விட்டான் என்றால் பெரியவனது ஆறுதல் இருந்தது. இடபோ பெரியவனும் இப்படி எண்டால் இந்தப் பெட்டையை வைத்துக் கொண்டு நான என்ன செய்வன்?'' கலங்கினாள் அம்மா.

''பிள்ளை! இவன் எப்ப இதிலை சேர்ந்தவன்.. ஒருவேளை தம்பி மணியின்ரை துவக்கோ...'' சந்தேகத்துடன் அம்மா கேட்டாள்.

''இல்லை அம்மா! சின்ன அண்ணையுடைய துவக்கு இஞ்சை இல்லை சின்ன அண்ணை எந்த நேரமும இடுப்பிலை தானே கட்டி இருப்பார்.

...அப்ப பிள்ளை இந்தத் துவக்கு இவனுக்கு எப்படிக் கிடைச்சது '' அம்மா கேட்டாள்.

''... அம்மா! இதைக் கொண்டுபோய் என்னுடைய பெட்டியிலை வைக்கிறன்... அண்ணை வந்து கேட்டால், தெரியாது எண்டு சொல்லுவம்... அண்ணையுடைய வாயால உண்மை வரட்டும்... நீ ஒண்டும் பேசாதை... சத்தம் போட்டுக். கத்தாதை ''

நளினிக்குச் சந்தேகம் முளைத்து கிளைவிட்டு பரவத் தொடங்கியது ..'' அண்ணை வெளிப்படையாக இயங்காமல மறைவில் இரகசியமாக இயங்குகிறானோ .. பலர் அப்பிடியும் இயங்குவதாக அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். ...ஆனாலும் இவ்வளவு நாளும் தனககுத் தெரியாமல் எப்படி இயங்க முடியும்... மாணவர் அமைப்பானாலும்- போர்க்கால நடவடிக்கையானாலும் இராப்பகலாக போராளிகளுடன் இயங்கி இருக்கிறாள், எத்தனையோ மாவீரரின் இறுதிச் சடங்கில் கலந்திருக்கிறாள். ஒரு நாளாவது அண்ணனையை எந்த இடத்திலும் காணவில்லை...'' சந்தேகத்துடன் அண்ணனின் பெட்டியை மெள்ளத் திறந்தாள்.

''...பிள்ளை! அவன்ரை பெட்டியைத் திறவாதை... வந்து தொங்கப் போறான்...'' அம்மா தடுத்தாள். பெட்டியை ஆராயாமல் மூடப் போன நளினியை. பெட்டியின் மேலாக தாறுமாறாக, வளைந்தும் நெளிந்தும், கீறிய காகிதம் கவனத்தைத் திருப்பியது இரண்டாக மடிக்கப்பட்டிருந்த அந்த காகிதத்தை விரித்து மேசையில் பரப்பினாள். அவளது கண்கள் வியப்பால் விரிந்தன. நெஞ்சுக் கூட்டுக்குள் பட பட என பந்துகள்எழும்பக் குதித்தன.

பல, பல நிறங்கள் தீட்டிய வரை படம் அது ஏதோ ஒரு நிலப் பகுதியை அழகாகதுல்லியமாக வரையப்பட்டிருந்தது பல இடங்களில் சிவப்புப் புள்ளிகள் கண்களைச் சிமிட்டின. இரண்டு சிவப்புப் புள்ளிகளுக்கு அருகே நீல நிற மையால் சரி போட்டிருநதன

...பிள்ளை அவன் வாற நேரம் ... அதை வை பிள்ளை! அம்மா ஆத்திரத்துடன் அவசரப் படுத்தினாள்.

நளினி சரியான நிலைக்கு படத்தைத்திருப்பிக் கொண்டாள். ... ஓ .. அவளுக்கு இப்போ புரிந்து விட்டது. அது எந்தப்பிரதேசத்தை உள்ளடக்கிய படம் என்று நன்றாகப் புரிந்து விட்டது. ... சிவப்புப் புள்ளிகள் — நிச்சயமாக போராளிகளின் முக்கிய தளங்களைக் காட்டுகின்றன.

சரி போட்ட இரண்டு இடங்கள் ... அட கடவுளே! போன கிழமை சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள், குண்டு வீசி அழிக்கப்பட்ட பகுதிகளா ?...

நளினியின் கைகள் நடுங்குவதைக் கண்ட தாய் கேட்டாள் ''என்ன பிள்ளை! பேப்பரைப் பிடித்துக் கொண்டு நடுங்கிறாய். உள்ள வையன்...''

...அம்மா இது பேப்பரில்லை ... எங்கடை உயிர்... அண்ணை போராளியோ என ஏங்கிப் போனாய் .. அவன் யமன் எண்டு அறிஞ்சால் நீ செத்துப் போய் விடுவாய் அம்மா எதுவும் விளங்காமல் நளினியை உற்றுப் பார்த்தாள்.

.. அம்மா! அண்ணை மோட்டார் சயிக்கிள் பிஸ்னஸ் எண்டு சொல்லி அடிக்கடி கொழும்புக்குப் போனானே. அவன் வேறை வியாபாரம் செய்து தான் காசு சம்பாதிக்கிறான்' என்னடி விசர் அலம்புகிறாய்'' அம்மா கோபத்துடன் கேட்டாள்.

''.. ஓம் அம்மா எங்கட மண்ணை ... எங்கடை இரகசிய இடங்களை ... எதிரிக்கு படம் போட்டுக் காட்டி பணம் சம்பாதிக்கிறான். அந்தப் பணத்தில் தான் நானும் நீயும் உடம்பு வளர்த்திருக்கிறம்...'' அருவருப்புடன் சொன்னாள் நளினி.

...'என்னடி சொல்லுகிறாய் .. அவன் அப்படிச் செய்வனே? மணியின்ரை தமயன் தானே அவன்... நீ எல்லாத்தையும் போட்டுக் குழப்பாதை ... அவன் வரட்டும் இஞ்சாலை வா, நளினி பெட்டியை பழையபடிமூடிக் கொண்டாள். கைத்துப்பாக்கியை மாத்திரம் தனது அறையை நோக்கிகொண்டுபோனாள் நடை தளர்ந்திருந்தாலும்சிந்தனை தளராமல்தொடர்ந்தது...அண்ணையின் மேசையில் பரவிக் கிடக்கும் பல நிறப் பேனைகள் .. அறையைப் பூட்டிப் போட்டு இரவு நெடுநேரம் வரை ஏதோ எழுதுவதும் ... சில வேளைகள்ல் கையில் 'கமெரா' வுடன் வருவதையும் . அவள் கண்டிருக்கிறாள். கமெராவைப் பற்றிக் கேட்டால் அவனிடமிருந்து பதிலே வருவதில்லை, எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் வரைபடம் தான் முடிவுக்குவந்தது.

மத்தியானச் சமையலை இடையில் நிறுத்திவிட்டு அம்மா விறாந்தையின் ஓரத்தில் பாயில்லாமல் படுத்துக் கிடந்தாள். மூடிய கண்களுக்குள், சின்னவன் மணி இடுப்பில் கைத்துப்பாக்கியைக் கட்டியபடி சிரித்தபடி வந்து போனான் பாடசாலை முகப்பில், ஒளி வெள்ளத்தில் ... பனை அளவில் நின்று ஊரைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான்... நளினி சொன்ன மாதிரி பெரியவன் முகாம்களைக் காட்டிக் கொடுக்கிறஅலுவலாகத்தான்அடிக்கடிகொழும்பு செல்கிறானோ? இல்லை... இல்லை... திடுக்கிட்டு எழுந்து சுவரோடு சாய்ந்து கொண்டாள்.

வெளியே மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் ஒலி கேட்டது. ஓ ... பெரியவன் சரவணன் வந்துவிட்டான் போல ... அம்மா எதுவுமே நடக்காத மாதிரி எழுந்து கொண்டாள். விரைவாக சமையல் அறைக்குள் போனாள். சரவணன் தன் அறையை நோக்கி நடந்தான். ''சமையல் முடியவில்லை தேத்தண்ணிபோட்டுத்தரட்டே'' அம்மா கேட்டாள். குரலில் நடுக்கம் இழைந்தது. '' வேண்டாம் ... அவசரமாக நான போகப் போறன் ... நாளைக்கு கொழும்புக்குப் போக வேணும் ... நளினியை உடுப்புகளைத் தோய்க்கச் சொல்லம்மா ... அறைக்குள் நுழைந்தான் சரவணன்.

நளினி தன்னறையை விட்டு வெளியேவந்து சரவணனின் அறையை எட்டிப் பார்த்தாள்.

சரவணன் பெட்டியைத் திறந்து, நளினிபாத்த அதே வரைபடத்தை எடுத்து மடித்து ஒரு உறைக்குள் போட்டுக் கொண்டான். இன்னுமொரு உறையை எடுத்து..., உள்ளங்கையை விரித்து அதில் கொட்டினான். அது ஒரு புகைப் படச்சுருள் என்பதை நளினி தெரிந்து கொண்டாள். அவளது நெஞ்சு திடுக்குற்றது. சரவணனின் அறைக்குள் திடீரென நளினி நுழைந்தாள் .. ''அண்ணை! அது என்ன பிலிம் சுருள்''... கேட்டாள். சரவணன் அதிர்ந்து விட்டான். ''...அது .. அது .. நானும் சினேகிதர்களும் எடுத்த படங்கள் நாளைக்கு கொழும்புக்குக் கொண்டுபோய் கழுவ வேணும்...''...அப்ப, கவருக்குள் கிடக்கிற அந்தப்படம்...''வரைபட உறையைக் காட்டிக் கேட்டாள்.

''...அது...படமல்ல கடிதம் ...'' சரவணன் எடுப்பதற்கு முன் நளினி முந்திக் கொண்டாள்

'' அண்ணை! உள்ளதைச் சொல்லு...நீ என்ன வேலை செய்கிறாய்...

''...நளினி! இது எல்லாம் உனக்கு தேவையில்லாத விஷயங்கள்...'' '...முகாம்களையும்- இரகசிய இடங்களையும்- நிறம் நிறமாக படம் கீறுவதும்- அதுகளைப்படம் பிடிக்கிறதும்தான் தேவையான விஷயங்களோ...'' பாய்ந்தாள் நளினி.

''.. தேவையோ...தேவையில்லையோ இதனாலை எனக்கு நிறைய வருமானம் வருகுது...''

இதுவரையும் சமையல் அறையில் புழுங்கிக் கொண்டிருந்தஅம்மா வெளிப்பட்டாள்...''டேய்! பெரியவா நீ என்ன சொல்லுகிறாய்...காசு வருகிறது என்றால் எதையும் செய்வியோ?...தம்பி மணியைப்பற்றி கொஞ்சமாவதுயோசிச்சியோ... அவனாலை என்னமாதிரி தலைநிமிர்ந்து நடக்கிறம். நீ தலையைக் குனியிறவேலையல்லோ செய்கிறாய்... அம்மாவுக்கு மூச்சிரைத்தது.

''...அம்மா! உங்களுக்கு எல்லாம் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. கொஞ்சம் கத்தாமல் இருங்கோ,...ஐயோ! இந்தப் பிள்ளையின்ரை புத்தி இப்படி ஏன் போச்சுது அது மண்ணுக்காகப் போச்சுது இது மண்ணைக் காட்டிக் குடுத்து காசு சம்பாதிக்குது ''தலையில் அடித்துக்கொண்டு அம்மா புலம்பினாள்.

''...நளினி அந்தப்படத்தைக் கொண்டா...'' நளினி படத்துடன் வெளியே வர முயன்றாள். சரவணன் மிக இறுக்கமாக நளினியின் தலைமுடியை பிடித்துக்கொண்டான். அவளது கையில் இருந்த வரைபடத்தை திருகிப் பறிக்க முனைந்தான் அவள் நிலத்தில் விழுந்து கால், கைகளை அடித்துக்கொண்டாள்.

''...விடடா அவளை .. விடடா... அம்மா சரவணனின் முதுகில் ஓங்கி அடித்தாள்.

நளினியின் கையில் இருந்த வரைபடம் கசங்கிய நிலையில் சரவணனின் கைக்கு மாறியது... போ... நாயே . காலால் எட்டி உதைத்தான். நளினி அறைக்கு வெளியேபோய் விழுந்தாள்]

''.. நீ என்னடா எல்லாரையும் முடிவெடுக்க நிக்கிறாயோ...?'' அம்மா கத்தினாள் நளினி எழுந்து மிகவிரைவாக தன்அறைக்குள்போனாள். எதையும் காதில் வாங்காத மாதிரி சரவணன் அவசரஅவசரமாகபுறப்பட்டுககொண்டிருந்தான்.

''...அண்ணை! '' குரல் கேட்டு சரவணன் திரும்பிப் பார்த்தான். பொறிகலங்கிப்போனான் நளினி வாசலைமறைத்தபடி நின்றிருந்தாள். அவளின் இரண்டு கைகளும் இறுக்கமாக கைத்துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டிருந்தன அம்மா, வெல வெலத்துப் போனாள்... ''பிள்ளை...'' கத்த முனைந்தாள் சத்தம் வெளியேவரவில்லை. பயம் கலந்த சிரிப்புடன் சரவணன் சொன்னான், ''அதை இங்கைகொண்டுவா...'' இரண்டு காலடி எடுத்து வைத்தான்.

''அண்ணை! கிட்ட வராதை... சின்ன அண்ணை எனக்கு. சுடக்காட்டிக் கொடுத்திருக்கிறார் . அது உனக்கு நல்லாத்தெரியும். நாளைக்கு விசாரணை எண்டு உன்னைப் பிடித்துக்கொண்டு போய்... நாலாயிரம் பேர் பார்க்க . நாற்சந்தியிலை வைச்சு சுடுவதிலும் பாக்க நான் சின்ன அண்ணை, நீ எல்லாரும் தவழ்ந்த இந்த நடுவீட்டிலை உனக்கு தண்டனை தாறன்...அம்மாவின் காலடிச்சத்தம் நளினிக்குப் பின்னால் கேட்டது. அதையும் மீறி... பட்...பட்... என்ற துப்பாக்கிச் சத்தம் வீட்டை கலங்க அடித்தது. நெஞ்சால் இரத்தம் வழிய முழங்காலில் சரிந்தான் சரவணன். அம்மா ஓங்கி ஓங்கி தன் தலையிலும், நளி

(6ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கைத் துப்பரவாக்குவது அல்லது கிழக்கைப் பங்கு போடுவது

நிலாந்தன்

சில வாரங்களிற்கு முன்பு கிழக்கில்செய்யப்பட்ட வெற்றி பெறாத ஒபறேஷன் ஜெயபாரவிற்குப் பிறகு இப்பொழுது ஒபறேஷன் ஜெயகங்கா ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிழக்கில் மேலும் இதுபோன்ற 'ஜெய'ங்களுக்கான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று ஊகிக்க இடமுண்டு. அவர்கள் கிழக்கைத் துப்பரவாக்க விரும்புகிறார்கள். கிழக்கில் ஜெயம் என்று அவர்கள் கருதுவது நகரங்களிற்கு வெளியேயும் தொடர்ந்தும் சவாலாகக் காணப்படும் புலிகளை அவர்கள் மறைவிடங்கள்வரைசென்று தாக்கிஅழிப்பதைத்தான். கிழக்கில் ஒரு தேர்தலை நடாத்தும் பட்சத்தில் அத்தேர்தலைக் குழப்பக்கூடிய குறைந்தபட்ச பலமும் மற்ற நிலைக்குப் புலிகளை ஒடுக்குவதே அவர்களின் பிரதான நோக்கமாயிருக்கலாம் கிழக்கைப் பூரணமாகத் தமது ஆதிக்கத்துள் கொண்டு வருவதன் மூலம் தமிழர்களின் தாய்நிலக் கோட்பாட்டைச் சிதைத்துவிடுவது என்பதில் கொழும்பு ஆரம்பத்திலிருந்தேதீவிரத் தோடும் மூர்க்கத்தோடும் காணப்படுகின்றது. கிழக்கை இழந்தால் பிறகு தமிழ்ழக் கோரிக்கை தலையில்லாத ஒரு முண்டத்தைப் போல் ஆகிவிடும். எதுவிதத்திலும் அரசியல் ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ - கிழக்கைப் பிரித்தெடுத்துப் பங்கு போடுவதில் கொழும்பு தொடர்ந்தும் உறுதியாகவும் தந்திரங்களோடும் இருக்கிறது.

கிழக்கு இப்பொழுது இன முரண்பாடுகளின் களமாயுள்ளது. அங்கு தமிழர்களிற்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான கசப்புணர்வுகள் அவற்றின் மோசமான கட்டத்தை அடைந்துவிட்டன. வடக்குக்-கிழக்கு இணைப்பிற்கு முஸ்லிம்களின் ஆதரவு அநேகமாகச் சந்தேகத்திற்குரிய தொன்றாகிவிட்டது. இந்நிலையில் முஸ்லிம்களோடும் சில தமிழர்களோடும் சேர்ந்து கிழக்கைப் பங்கு போடுவதற்குக் கொழும்பு விரும்புகிறது.

கொழும்பின் மேற்படிவிருப்பமும் சமீபத்தில் பெரிதும் விவாதிக்கப்பட்ட ரெலோவினதும். ஈ. என். டி. எல். எவ் சிறினிவாசனினதும் தீர்வுக்கான யோசனைகளும் ஒரே கோட்டில் சந்திக்கின்றன. இந்த யோசனைகள் தமிழர்களின் தாய்நிலத்தைப் புறக்கணிக்கின்றன வடக்கையும் கிழக்கையும் தனித்தனி அலகுகளாகப்பார்க்கின்றன. இந்த யோசனைகளை இரு பிரதான சிங்களக் கட்சிகளும் வரவேற்கின்றன. முஸ்லிம்களிடமும் சாதகமான சமிக்ஞைகள் காணப்படுகின்றன. கொழும்பிலிருந்து வெளியாகும் அநேகமான பத்திரிகைகள்மேற்படி யோசனைகளைப் பாராட்டியும் இந்த யோசனைகளை எதிர்த்த தமிழ்க் கட்சிகளைச்சாடியும் ஆசிரியர் தலையங்கங்கள் எழுதி வருகின்றன. தமிழர்களின் தாய் நிலத்தை இரு வேறு துண்டுகளாகப் பார்க்கும் யோசனைகளைச் சில தமிழர்களே முன்மொழிந்திருப்பது சிங்களவர்களிற்கு அதில் தொங்கிக் கொள்ள வசதியாகிவிட்டது.

சண்டே ஐலண்ட் இல் தராகி ரெலோவின் மேற்படி 'மூலோபாயத்தை' கிழக்கு மையப் பார்வையாக வர்ணிக்கிறார். இப்பொழுது ரெலோவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கிழக்கைச் சேர்ந்தவர்கள். எனவே கிழக்கில் தனது ஆதிக்கத்தை நிறுவுவதற்கு ரெலோ விரும்புகிறது. ஏற்கனவே கிழக்கில் ரெலோ ராணுவத்தோடு சேர்ந்து தொழிற்படுகிறது. எனவே கிழக்கைத் தனி அலகாக ரெலோ கருதுவது என்பது குறைந்தபட்சம்கிழக்கிலாவது தனது ஆதிக்கத்தை நிறுவலாம் என்று நம்புவதாற்றான் என்று தராகி எழுதுகிறார். அவ்வாறெனில் யாழ்ப்பாண எம். பி. சிறினிவாசன் ஏன் இத்தகைய ஒரு தீர்வை முன்வைத்தார்?

'யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சிறினிவாசன் 70களில் (?) பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டுத் தோற்றவர் என்று கூறப்படுகிறது பின்னர் லண்டன் வாசியாகிவிட்ட இவரிற்கு தற்சமயம் லண்டனில் ஏராளமான சொத்துக்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. 88 பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் ஈ. என். டி. எல். எவ் சார்பாகப் போட்டியிட்டு இவர் பெற்ற மொத்த வாக்குகளின் தொகை 600 இற்கும் குறைவானது. இவ்விதம் சுமார் 600 தமிழர்களின் பிரதிநிதியாகிய இவர் தமிழர்களின் தாய்நிலத்தைத் துண்டுகளாய் பார்க்கும் தீர்வை (அவர் சார்ந்த இயக்கத்தின் ஒப்புதலைப் பெறாமலேயே) எதற்காக முன் வைத்தார்? தராகி கூறுகிறார்; சிறினிவாசன் விரைவில் லண்டனிற்குப் போய்விடுவார் என்று. அதன் பின் அவருடைய யோசனைகள் வெறும் கடுதாசித் தீர்வாகி விடும் என்று. ஆனால் கொழும்பில் கூறுகிறார்கள், மேற்படி யோசனைகளின் பின்னணியில் அரசாங்கத்தின் கை இருப்பதாக.

கிழக்கில் ஒரு தேர்தலை நடத்தக் கொழும்பு விரும்புகிறது என்றும் அதன் பொருட்டு கிழக்கைத் துப்பரவாக்கவும், பங்கு போடவும் அது தயாராகி வருகிறது என்றும் இதற்கு இசைவாக ரெலோவையும், சிறினிவசானையும் கொழும்பு கையாள்வதாகவும் கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. கிழக்கிலுள்ள பெரும்பாலான அரசியல் வாதிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மேற்படி தீர்வுக்கு மறைமுக ஆதரவு என்றும் மேலும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன இத்தகைய ஆதரவுக்குரிய பின்னணி விபரீதமானது. வடக்கு மையத் தலைமைத்துவத்தை எதிர்த்து கிழக்கில் தமிழ் அரசியல் தலைமைத்துவம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு மேற்படி தீர்வு ஒரு சந்தர்ப்பத்தைத் தருவதாக முன்சொன்ன அரசியல் வாதிகளும் சில பிரமுகர்களும் கருதுவதே அவர்கள் இத் தீர்வை ஆதரிப்பதற்குரிய பிரதான பின்னணி என்றும் கூறப்படுகிறது.

இதன்படி கிழக்கில் ஏற்கனவே (தமிழர்களின்) நகரங்களில் நிலை கொண்டுள்ள ரெலோ அங்கு தேர்தலைச் சந்திக்க தயாராகலாம் என்று பொதுவாக ஊகிக்கப்படுகிறது அடுத்த ஆண்டு இலங்கையைப் பொறுத்தவரை ஒரு தேர்தல் ஆண்டாக அமையலாம் என்றும் நம்பப்படுவதால் அதையொட்டி கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை வேகப்படுத்தி கிழக்கைத் துப்பரவாக்கி, பின் தேர்தல்கள் மூலம் பங்குபோட கொழும்பு விரும்பக்கூடும்

ரெலோ இப்பொழுது கிழக்கில் தமிழர்களின் நகரங்களில் நிலை கொண்டுள்ளது. அங்

(6ஆம் பக்கம் பார்க்க)

# -- அர்த்தமுள்ள புகைப்படக் கலை --



★ உங்களால் எப்படிஒரு படப்பிடிப்பாளராக முடிந்தது? உங்களுக்கு முன்னோடி யார்?

O எனது முன்னோடி எனது தந்தை மாணிக்கதம்பி. அவர் ஒரு புகைப்படக் கலைஞர் அத்துடன் ஓவியத்தை முதன்மைப்படுத்தும் ஒரு ஓவியர் என்றும் அவரைக் கூற முடியும். 1922-இல் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் The Artistic Works Company என்ற பெயரில் ஓவியத்தை மையப்படுத்தி ஒரு படம்பிடிக்கும் ஸ்ரூடியோவை நடத்தி வந்தார். பெயர் படம்பிடிப்பு நிலையம் என்று அர்த்தப்பட வேண்டும் என்ற ஆசையினால் கம்பனியின் பெயரை வில்லி ஸ்ரூடியோ என்று மாற்றியமைத்தார். இந்தச் சூழலில் சிறுவனாக வாழ்ந்த நான் படப்பிடிப்புக் கலையை உள்வாங்கிக் கொண்டேன். அது என்னுள் வேரூன்றி விட்டது. முற்றிலும்மேறகத்திய தன்மை கொண்ட இக் கலையைஎனது தகப்பனார் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் தந்தை எஸ். கே. லோட்டனிடம் கற்றுக்கொண்டார். அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன்.

★ உங்கள் தொழில்சார்ந்த முன்னேற்றத்துக்குக்காரணஸ்தர் யார்? அவர் எவ்வகையில் உதவினார் என்று கூற முடியுமா?

O குருவும் சகலதும் எங்கள் தகப்பனார் ான். படப்பிடிப்புக்கலையில் நான் பெற்ற முன்னேற்றத்துக்குத் தகப்பனார் தான் காரணம். மாணவன் என்ற நிலையை மீறித் தொழில்வாழ்க்கையில் காலடி எடுத்து வைக்க உதவினார் அவர். தொழிலைப் புரிந்து கொள்வதற்கான பயிற்சியை அவரிடம் தான் பெற்றேன்.

★ ஆரம்பத்தில் எதிர்ப்புகள் அல்லது தடைகள் உங்கள் வளர்ச்சியைப் பாதித்ததுண்டா?

O தடைகள் நானாக உருவாக்கிக் கொண்டவைதான். 1941-இல் கலை வெளிப்பாடு சுலபமாக இருந்த காலத்தில் பட்டாளத்தில் சேர்ந்து இந்தியா, கிழக்கு ஆபிரிக்கா,

> எழுபது வயதில் நுழைந்திருக்கும் செல்லம்ஸ் என்கிற மாணிக்கத் தம்பி நீக்கிளஸ் ஐம்பது வருடங்களுக்கு மேல் படப்பிடிப்புத்துறையில் கழித்திருக்கிறார், இன்று அவர் ஓர் ஆடி ஓய்ந்த பம்பரம். இவரது தகப்பனார் மாணிக்கத்தம்பி ஒரு படி முன்னே போய் 1920 இல் ஒரு ஸ்ரூடியோவை அமைத்தவர். யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற படப்பிடிப்பாளர். இத்தகைய பகைப்புலத்தில் செல்லம்ஸின் மகள் ஜோய் ஜெயக்குமார் கொழும்பில் ஒரு செய்திப் படப்பிடிப்பாளர் [போட்டோ ஜெர்னலிஸ்ட்] செல்லப்ஸ் வழங்கிய பேட்டி இங்கே தரப்படுகின்றது.

அபிசீனியா, எகிப்து, பலஸ்தீனம், ஜோர்தான் ஆகியநாடுகளில் பணிபுரிந்ததின் காரணமாக தொடர்ச்சியான நடவடிக்கையாகப் படப்பிடிப்புக் கலையை மேற்கொள்ள முடியவில்லை. 1947-இல் நாடு திரும்பி டிசயின்ஸ் லிமிட்டெட் என்ற ஸ்ரூடியோவைப் பங்காகச் செய்தேன். அபிப்பிராய பேதங்கள், எதிர்ப்புகள் காரணமாக மூடுவிழா நடந்தது நான் மனம் சலிக்கவில்லை. 1950 இல் செல்லம்ஸ் ஸ்ரூடியோவை நிர்வகித்தேன். 1966 இல் உரிமையாளர்ஸ்ரூடியோவை எனக்கே விற்றார். அதற்கப்புறம் ஆள் உதவி இல்லாததால் ஸ்தாபனத்தை விற்க வேண்டியதாயிற்று. தொழில்வளர்ச்சியின் அடுத்த கட்டத்துக்கு இது ஒரு தடையாக அமைந்தது.

★ உங்களது தொழிலில் மறக்க முடியாத சில அனுபவங்களை ஞாபகப் படுத்த முடியுமா?

O புனித. பற்றிக்ஸ் கல்லூரியில் கே. எஸ். பி. செல்லத்துரைஅவர்களெனதுஆசிரியர். அவர் மகனின் முதற்சற்பிரசாதப் படத்தை எடுக்கும்படி என்னைக் கேட்டுக்

**பேட்டி மதனி**

கொண்டார். படம் அழகாக அமைந்தது இதுவே எனது முதல் அனுபவம். அதனை என்னால் மறக்க முடியாது. மற்றொரு அனுபவம் 1930 இல் என்று ஞாபகம். ஆள் பதி அன்றூ கோல்டிக்கட்டின் யாழ்ப்பாண விஜயம். அன்னபோல் வடிவமைந்த அலங்காரப் படகொன்றில் அவரை ஊர்காவற்றுறைக்கு அழைத்துச் சென்றார்கள். அந்தக் காட்சியைப் படமாக்கினேன். அது கொழும்பு ரைம்ஸ் பத்திரிகையில் முன் பக்கத்தில் முழு உருவில் பிரசுரமாகியது. பலர் என்னைப் பாராட்டினார்கள். அடுத்த அநுபவம் வடிவு. புனித பற்றிக்ஸ் கல்லூரியில் வைபவமொன்றில் 75 பேர் கொண்ட 15''X12'' SITTING ஆகும். இவ்வகையில் இது எனது முதற் படம்.

★ புகைப்படப் பிடிப்புக் கலை பற்றியஉங்கள் எண்ணக்கரு என்ன?

O பொதுவாகப் பொருளை மனதில் உருவாக்கிக்கொண்டு, அதை எந்தக் கோணத்தில், எப்படிப்படம் எடுப்பது என்ற மனவடிவத்தைப்பெற்ற பிறகு கமராவில் பதிவுசெய்துகொள்ளலாம். கறுப்பு-வெள்ளையில் ஒளியும் நிழலும் (Light and Shade) கலந்து எடுப்பதன் மூலம் உருவம் (Portrait) உணர்வு பூர்வமாகப்பதிவு செய்யப்படுகிறது கலர்படத்தின் தாக்கம் படப்பிடிப்பில் இருக்கத்தான் செய்கிறது, அதில் தவறு இருப்பதாக நான் கூறவரவில்லை. ஐரோப்பாவில் புகைப்படக்கலையில் ஆர்வம்உள்ளவர்கள் கறுப்பு-வெள்ளை (Black and white) படத்தைத்தான் பெரிதும் விரும்புகிறார்கள், காரணம், எதார்த்தத்தைக் கறுப்பு-வெள்ளைப் படத்தில் தான் வெளிப்படுத்தலாம். ஒளியும் நிழலும் சேர்ந்த கறுப்பு வெள்ளைப்படத்திலதான் ரசனையும் உள்ளது.

★ புகைப்படத்தில் குறிப்பிட்ட உணர்வைப்பதியவைக்க முடியுமா?

O மனித உணர்வுகளைச் சித்திரிக்கும் சக்தி புகைப்படக் கலையில் மேன்மையான ஒரு தனி பண்பு. சூழலாலும், புறநிலைத் தாக்கங்களினாலும் வெளிப்படும் ரசங்களை நாம் புகைப்படத்தில் பதிய வைக்கலாம். பொதுவாக இது (Out

(6 ஆம் பக்கம் பார்க்க)

> யாழ்ப்பாணத்தில் புகைப்படக்கலை, வாழ்வதற்கான ஒரு தொழிலாகப் பயன்படுகிறதே தவிர அதன் மனித அம்சத்தை அறிந்திராமை குறித்து எப்போதும் விமரிசனமும் உண்டு ஜப்பானில் ஆயிரக்கணக்கான வர்களைப் பாதித்த மின்னிமோட்டா நோய் பற்றித் தன்புகைப்படங்கள் மூலம் உலகத்தின் கவனத்தை ஈர்த்த ஜீன்ஸ்மித், வியட்நாம் படகு அகதிகள் (Boat People) படத்தை எடுத்து உலகப் புகழ் பெற்ற ஜா கருணாகரன் ஐஸக் போன்றோர் எம் மத்தியில் உருவாக இல்லை என்பது கவலைக்குரியது. எம்மவர்கள் இக் கலையிலுள்ள மனித அம்சத்தைக் கைவிட்டு. இந்த ஊடகத்தை வியாபார மயமாக்கியதால் இந்த நிலை போலும்

## தெரிவுக்குழு

இனிமேல் மாநாடு. பாராளு மன்றத் தீர்வு போன்ற எதற்கும் இடமில்லை என்பதை அது உருவாக்கி விட்டது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போகிறேன் என்றோ அதற்காகச் சர்வ கட்சி மாநாடு, வட்டமேசை மாநாடு போன்ற ஏதாவது ஒரு மாநாட்டைக் கூட்டித் தீர்வுகாணப் போகிறேன் என்றோ அரசு சொல்ல முடியாதவாறும், செய்யமுடியாதவாறும் தெரிவுக்குழு விவகாரம் ஒரு முற்றுப் புள்ளியாய் அமைந்துவிட்டது.

தெரிவுக்குழுவிடம்;

ஐ.தே.க. வின் தீர்வு மாகாணசபை,

சு.க வின் தீர்வு மாகாண சபை. எனவே இறுதியாக தெரிவுக்குழுவின் தீர்வுமாகாணசபை,

இதுவே தெரிவுக்குழு அமைக்கபபட்டதன் விளைவு அப்படியாயின் இனிமேல் இதற்கு மேற்பட்ட ஒரு தீர்வுக்கு வரவோ அன்றி அப்படிஒரு தீர்வுக்கு வரப்போகிறோம என்று கூறிப் பேச்சுவார்த்தை நடத்தவோ எப்படி அரசால் முடியும்?

ஆதலினால் தெரிவுக்குழு விவகாரமானது பிரேமாவுக்கு அரசியல்ரீதியில் மாற்றுவழியற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. இது பிரேமாவைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சினைசம்பந்தமான ஓர் அரசியற் தற்கொலையே ஆகும்.

III

1979 டிசம்பர் 31ஆம் திகதிக்குள் வடபகுதியில் 'பயங்கரவாதிகள்'' வழித்துத்துடைக்கப்பட்டு விடுவார்கள் என்று ஜே ஆர் சூளுரைத்து பிரிகேடியர் வீரதுங்கா தலைமையில்ஓர் ராணுவஅணியைவடபகுதிக்கு அனுப்பி வைத்தார். இச்சூளுரைகளும் காலக்கெடுக்களும் இற்றை வரை தொடர்கின்றன. ஆனால் நிலைமை மறுவளமாய் வளர்ந்துள்ளது. 1979 ஆம் ஆண்டு மிகச் சாதாரணமான உள்ளூர்த் தயாரிப்பு ஆயுதங்களுடன் காணப்பட்ட போராளிகள். வடபகுதியில் சில பகுதிகளில் மட்டும் காணப்பட்ட போராளிகள், இன்று வடக்கு, கிழக்கு ஆகிய முழுத் தமிழீழப் பிரதேசத்திலும் பரந்து நவீன ஆயுதங்கள் சகிதம் பெரும் அணியாகவும் காணப்படுகின்றனர். 1979 ஆம்ஆண்டுவாக்கில்சாதாரண துவிச்சக்கர வண்டிகளில் ஓரிரு பொலிசாரேபோராளிகளைத் தேடிக் கண்டு பிடிக்கச் சென்றதற்குப் பதிலாக இன்று குண்டு வீச்சு விமானங்கள், பீரங்கிப் படகுகள், கனரக வாகனங்கள் சகிதம் பெரும் அணியணியாக முப்படையினரும் சேர்ந்து தேடுதல் போட வேண்டியநிலைக்குப்போராட்டம் வளர்ந்துள்ளது. இந்நிலையில் ராணுவத்தீர்வில் அரசாங்கம் தொடர்ந்தும் நம்பிக்கை வைத்திருக்குமாயின் அது கடந்தகால வரலாற்று தர்க்கத்திற்கு நேர் எதிர்ப்பக்கத்தில் நடப்பதாகவே அர்த்தம்.

எனவே தற்போது பிரேமாவின் கையில் மிஞ்சியுள்ளது என்னவெனில் இராணுவத் தீர்வும் காணமுடியாது. அரசியல் தீர்வும் காணமுடியாது என்ற கையறு நிலையே யாகும்.

அப்படியாயின் ''அடுத்தது என்ன?'' என்பதே இன்று தென்னிலங்கை அரசியல் அவதானிகள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும்.

''அடுத்தது என்ன?'' என்பது அரசியலில் ஓர் அரசியல் சூத்திரமாகும். அரசியலில் திட்டவட்டமான ஓர் இரண்டக நிலை ஏற்பட்டுவிட்டது. யுத்தம் வடக்கு கிழக்கோடு மட்டும் நிற்குமென ஆட்சியாளர் நம்பினால் அவர்கள் இந்த இரண்டக நிலையைப் பற்றிப் பெரிதும் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. ஆனால் வடக்குக் கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடரும் வரை புலிகள் தெற்கில் தந்திரோபாயத் தாக்குதல்களை நடாத்துவார்கள் என்று அரசு நம்புவதால் அது நிம்மதியாய் இருக்கப்போவதில்லை

இது இலங்கையின் இனப் பிரச்சினை வரலாற்றில் முற்றிலும் புதிய கட்டம்.

## அர்த்தமுள்ள

Door) இல்தான் சாத்தியமாகும் நாடகம், கதகளி, பரதம் போன்ற அவைக்காற்றுக் கலைகளில் வெளிப்படுத்தப்படும் ரௌத்திரம், வீரம், சோகம், சிருங்காரம் போன்ற ரஸங்களையும் படமாக்கலாம் அலங்காரமற்ற அர்த்த பாவத்தோடு மனிதனின் உணர்வைப் புகைப்படத்துடன் தொடர்பு படுத்தலாம். ஆனால் ஸ்ருடியோவில் இவ்விதமான ரசங்களைப் படமாக்க முடியாது. காரணம், ஸ்ருடியோக்களுக்கு வருபவர்கள் ஒரு தேவை கருதிப்படம் எடுக்க வருகிறார்கள், உதாரணமாக,அவர்கள் முகம்தொங்கிடபோயோ அல்லது கோபாவேசத்தோடோ எம்மிடம் வருவதில்லை.

★ மற்றக் கலைகள் போல் வலுவான மனிதாபிமானத்தை அல்லது நடைமுறை சார்ந்த பிரச்சினைகளைப் புகைப்படக் கலை மூலம் வெளியிட முடியுமா?

O தாராளமாக முடியும். இன்றுள்ள குழப்பமான சூழ்நிலையில் மக்களின் உணர்வுகளை வெளிக்கொணர்வதற்குப் புகைப்படக் கலையை ஓர் ஊடமாகப் பாவிக்கலாம். ஆனால் மக்களைப் படம் எடுப்பவர்கள் மக்களைப்பற்றி உண்மையான அக்கறை கொண்டிருக்க வேண்டும். உருவத்தைப் படமெடுக்காமல் உள்ளத்தைப் படமெடுப்பதன் மூலம் வலுவான மனிதத்தன்மையை வெளியிட முடியும். அப்போது தான் அது அர்த்தமுள்ள கலையாகிறது.

★ இத்துறையில் உங்கள் மாணவர்கள் என்று எவரையும் குறிப்பிட முடியுமா? இன்றைய புகைப்படக் கலைஞர்களுக்கு நீங்கள் கூறும் யோசனைகள் என்ன?

O கலாம்சத்தை விட இயந்திர நுட்பத்திலேயே எமது இன்றைய புகைப்படக் கலைஞர்கள் நாட்டம் கொள்வது போல் தெரிகிறது. கலர்படம், ரி.வி, என்று விஸ்தாரமடைந்து கொண்டே போகிறது. சம்பவங்களை முக்கியத்துவமுடைய அர்த்தமுடைய படங்களாக எடுப்பதில் படப்பிடிப்பாளரின் வெற்றி தங்கியுள்ளது அனுபவமும் போதிய பயிற்சியும் இல்லாமல் இதனைச்சாதிக்க முடியாது படப்பிடிப்புத் தொழிலுக்குப் போகிறவர்களுக்குப் பயிற்சிப் பட்டறை அவசியமானது. மேல்நாடுகளில் புகைப்படத் கற்கைநெறி கல்லூரிகளில் போதிக்கப்படுகிறது இந்த போல் பெயருக்குச் சொல்லித் தரப்படுவதில்லை.

படப்பிடிப்பாளர்களான எஸ் டி. அரசு,எம், ராஜரெட்ணம், சாவகச்சேரி முதலிங்கம் ஆகியோரை எனது மாணவர்களாகக் குறிப்பிடலாம்.

## களைகள்

னியின் தலையிலும் அடித்துக் கொண்டாள் ஆனால்தொண்டையை விட்டு சத்தம் வரமறுத்தது — ஒரு வேளை இவனுக்காக அழக்கூடாதென குரலே முடங்கி விட்டதோ ...? பத்து மாதங்கள் கட்டிக் காத்த கருவறையில் இருந்து பந்தாகப் புறப்பட்ட ஏதோ ஒன்றுதொண்டையின்ஊடாக விசும்பலாக வெளிவந்தது

சரவணனிற்கு அருகே கிடந்த வரைபடம்... மேசையில் கிடந்த படச்சுருள் துப்பாக்கி எல்லாவற்றையும் தன் கைப்பைக்குள் போட்டுக் கொண்டு நளினி புறப்பட்டாள். அவளது கன்னங்களில் கண்ணீர் கோடிட்டுக் கொண்டிருந்தது.

விறாந்தையில் சைககிள் சத்தம் கேட்டது. அம்மாவிற்குத் தெரியும் நளினி போராளிகள் முகாமிற்குப் போகிறாள் என்று... அம்மா தொடர்ந்து வீட்டின் நடுப்பகுதியில் கிடந்து புரண்டு புரண்டு அழுது கொண்டிருந்தாள்.


திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கம்

### விசேட அறிவித்தல்
### மீண்டும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல்

கடந்த 16. 12. 1992 நிகழ்ந்த இயக்குனர் சபைத் தீர்மானத்தின்படி சிறுவர் நிறைவாழ்வு இல்லத்திலிருந்து அண்மைக் காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக வெளியேற்றப்பட்ட மாணவ, மாணவிகளை மீண்டும் இல்லத்தில் வந்து சேர்ந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இயக்குனர்சபை சார்பில்,
க. சிவானந்தமூர்த்தி,
செயலாளர்,
சைவவித்தியாவிருத்திச்சங்கம்,
திருநெல்வேலி.

(சி-5606)

திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்கம்

### பொதுமுகாமையாளர் வே.குகதாஸ்
### தற்காலிக இடைநிறுத்தம்

கடந்த 16-12-1992 நிகழ்ந்த இயக்குனர்சபைத் தீர்மானத்தின்படி சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தில் இதுவரை காலமும் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றி வந்த வே. குகதாஸ் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

இதனால் பொதுமுகாமையாளர் மேற்படி சங்கத்தோடு தொடர்பான கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு 17-12-1992-ல் இருந்து மறு அறிவித்தல் வரை மேற்படி சங்கத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இவரோடு தொடர்பான எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் சங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளாது என்பதை அறியத்தருகின்றோம்.

திரு. க. சிவானந்தமூர்த்தி,
கௌரவ செயலாளர்,
இயக்குனர்சபை சார்பில்.
(சி/5607)


## கிழக்கை...

கும் முஸ்லிம்களின் நகரங்களில் அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது கிழக்கில் சிவில் எந்திரத்தைத் தம்மிடம் தரும்படி சில வாரங்களிற்கு முன்பு ரெலோவிடுததகோரிக்கையை கொழும்பு நிராகரித்து விட்டது அதோடு வடக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள பிரதேசங்களில் ரெலோவை அனுமதிப்பதற்கும் கொழும்பு தயாராக இல்லை என்று கூறப்படுகிறது பொதுவாக கொழும்பிலுள்ள தமிழ் இயக்கங்களைப் பொறுத்தவரை கொழும்பு ஒரு விசயத்தில் உறுதியாகவும் தீர்க்கமாகவும் செயற்படுகிறது. அதாவது, யுத்த முனையில் மேற்படி இயக்கங்களை ஒன்றாகச் சேர்ந்து இயங்க விடாமல்; தனித்தனியாக வெவ்வேறு யுத்த முனைகளில் இவைகளைப் பயன்படுத்துவது. என்பதே அது. இப்போது கிழக்கில் ரெலோ நிறுத்தப்பட்டுள்ளது. வடக்கில் வவுனியாவில் புளொட்டும், தீவுகளில் ஈ.பி.டி.பி. யும் நிறுத்தப்பட்டுள்ளன.

ரெலோ கிழக்கில் தான் பலத்துடனுள்ளதாகக் கருதுகிறது கிழக்கைத்தனி அலகாக்கி அங்கு நிகழக்கூடிய ஒரு தேர்தலின் மூலம் தன்னை ஸ்தாபிப்பது அதன் நோக்கமாயிருக்கலாம். பிரிக்கப்படாத தாய் நிலம்புலிகளின்பிரதான நிபந்தனைகளில் ஒன்று. வடக்கு தொடர்ந்தும் புலிகளின் கட்டுப்பாட்டில இருக்கிறது. இந்நிலையில்வடக்கையும் கிழக்கையும் தனித்தனி அலகுகளாகக் கருதுவதின் மூலம் இத்தீர்வு ஒருவிததில் வடக்கைக் கைவிடுகிறது. இதுமறைமுகமாக வடக்கைப் புலிகளின் ஆதிக்கத்தில் விட்டுவிடுகிறது. வடக்கில் புலிகளின் ஆதிக்கத்தை உடைப்பது உடனடிச் சாத்தியமற்றது. என்பதும் இங்கு யுத்தம் காலக்கெடுக்களிற்குஅப்பாலும் முடிவின்றித் தொடரக்கூடியது என்பதையும் கொழும்பும் கொழும்பிலுள்ள தமிழ் இயக்கங்களும் உணரத் தொடங்கியுள்ளன. எனவேகுறைந்தபட்சம் கிழக்கையாவதுதனது ஆதிக்கத்துள் வைத்திருக்கரெலோவிரும்புகிறது ஆனால்மற்றஇயக்கங்கள் தாய்நிலம் துண்டாடப்படுவதானதீர்வுகளை ஒப்புக்கொள்வதின் மூலம் தமிழ்த் தேசியவாதத்திற்குரிய ஏகத்தலைமைத்துவம்புலிகளிடம்சென்றுவிடும் என்ற எச்சரிக்கையுணர்வோடு மேற்படி யோசனைகளை எதிர்க்கின்றன.

எனினும், எல்லாவற்றிற்கும் அப்பால் கிழக்கைத் துப்பரவாக்குவது அதாவது புலிகளின் போர் ஆற்றலை முறியடிப்பது உடனடிச் சாத்தியமற்றது. அங்கு இராணுவம் புலிகளின் மறைவிடங்களைத் தேடிச் செல்லும்போது புலிகள் தமக்கு நன்கு பரிச்சயமான காட்டின் ஆழங்களிற்குச் சென்று விடுவார்கள். புலிகளின் கைவிடப்பட்ட முகாம்களைக் கைப்பற்றுவதைத்தான் தொடர்ந்தும் எவ்வளவு காலத்துக்கு வெற்றி என்று சொல்லித் திரிவது?


### நீ மறைந்தும் ஓர் திங்கள் ஆனதுவோ?

மலர்வு : 30-07-91 உதிர்வு : 21-11-92



எங்கள் உயிர்க்குஞ்சே
எங்கே பறந்தாயோ?
நினைவுக் கொடியெல்லாம்
நின் இறக்கை மென்மலர்கள்
விழியாலே நீருற்றி
வெந்து துடிக்கின்றோம்
புதிய சிறகெடுத்து – எம்
புண் ஆற்ற வாராயோ

### செல்வி சாகித்தியா திருநந்தகுமார்

தினமும் உன் வரவிற்காய் தியானித்திருக்கின்றோம்.

இராணி மாளிகை
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

அப்பா, அம்மா,
குடும்பத்தினர்

(சி-5605)

# காங்கிரஸ் உட்கட்சி பூசல்; பா. ஜ. அரசுகள் கலைப்பு



ஐந்து மத அடிப்படைவாதக் கட்சிகள் மீது தடைவிதித்து ஐந்து நாட்களின்பின்னர் பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சிபுரிந்த மத்திய பிரதேசம், ராஜஸ்தான் இமாலயப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் அரசாங்கங்களைக் கலைத்து விடுமாறு ஜனாதிபதிக்கு நரசிம்மராவ் தலைமையிலான இந்திய மத்திய அரசாங்கம் பரிந்துரை செய்தது இதன் பிரகாரம் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவிற்குச் சற்று முன்பதாக இம்மாநில அரசாங்கங்களைக் கலைக்கும் பிரகடனம் இந்திய ஜனாதிபதியால் வெளியிடப்பட்டது.

பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி புரிந்த மாநிலங்களில் தீவிர மத அடிப்படைவாத அமைப்புக்கள் மீது மத்திய அரசால் விடுக்கப்பட்டதான உத்தரவை இம்மாநில அரசாங்கங்கள் அமுலாக்குவது சிரமமே என அம்மாநிலங்களின் ஆளுநர்கள் கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலேயே இவ் ஆட்சிக் கலைப்புகள் நிகழ்ந்ததாக மத்திய அரசு விளக்கம் கொடுத்துள்ளது. இதேவேளை இவ் அரசுகள் கரசேவாவில் ஈடுபடுவதற்கு பகிரங்கமாகவே தொண்டர்களைத் திரட்டியதாகவும் பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு பகிரங்கமாகவே ஆதரவு தெரிவித்து இந்தியாவின் மதசார்பின்மை கொள்கைக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெரும் சேதங்களை உண்டுபண்ணியதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டும் உள்ளன.

பா. ஜ. க. மத்திய அரசின் இக்குற்றச்சாட்டுக்களை நிராகரித்துவைதோடு, இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த கோஷ்டிப் பூசலே இம் மாநிலங்களின் ஆட்சிகள் கலைக்கப் படுவதற்குக் காரணம் எனக் குற்றம் சாட்டியுள்ளது. பா. ஜ கட்சியின் இக்குற்றச்சாட்டு முற்றமுழுதாக தோல்வியின் விரக்தியினால் எழுந்த குற்றச்சாட்டு என நிராகரித்துவிட முடியாது ஆனால், பாபர் மசூதி-ராமஜென்ம பூமி விவகாரத்தால் மத்தியில் ஓர் ஆட்சியைக் கலைத்த பா. ஜ. க. அதேவிவகாரத்தால் நான்கு மாநில அரசுகளை இழக்க வேண்டிவந்தமை அவர்களைப் பொறுத்து கவலைக்குரியது தான்.

காங்கிரசின் தலைமை நேரு குடும்பத்தினரிடம் இருக்கும் வரை காங்கிரஸ் மத்தியில் அரசமைக்கும் போது பிரதமர் பதவி என்பது அவர்களின் சொத்தாகவே இருந்தது. காங்கிரஸ் கட்சிக்குள் நடக்கும் அரசியல் சதுரங்கத்தில் வெட்டுக்கு இலக்காகமுடியாத ராஜாக்களாகவே நேரு குடும்பத்தினர் இருந்தனர் ஆனால், நேரு குடும்பம் அரசியலில் இருந்து ஒதுங்கிய பின்னர் காங்கிரஸின் தலைமையும், பிரதமர் பதவியும் வெட்டுக்குள்ளாகும் ஆபத்து நிறைந்த ராஜாக்களுடையதாகியது. இச்சூழ்நிலையில் பிரதமராகிய நரசிம்மராவ் போன்றவர்கள் எதிர்க்கட்சிகளிடம் இருந்து காங்கிரஸ் ஆட்சியைப் பாதுகாக்கும் அதேவேளை காங்கிரஸ் கட்சிக்குள் இருந்தும் போட்டியாளர்களிடம் இருந்தும் தமது பதவியைப் பாதுகாக்கவேண்டிய நிலைக்கு உள்ளாகினர்.

நரசிம்மராவ் அமைச்சரவையிலுள்ள மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங், பாதுகாப்புத்துறை அமைச்சர்சரத்பவார் இருவரும் ஆரம்பம் முதலே பிரதமர் பதவியில் குறியாகவுள்ளவர்கள். இதில் மறைத்துப் பேசுவதற்கு ஒன்றுமில்லை ஆனால், நரசிம்மராவுடன் தற்பொழுது நேரடியாக மோதுவதற்கு மனித வளமேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங்கே முனைப்பாகவுள்ளார். பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தற்பொழுது ஓர் அடக்கிவாசிக்கும் நிலையிலேயே காணப்படுகின்றார். திரு. அர்ஜுன் சிங்கிற்கு திருப்பதி மாநாட்டில் நடந்த காரியகமிட்டி தேர்தலில் கிடைத்த அமோக வெற்றி அவருக்கு ராவை நேரடியாக எதிர்க்கும் எண்ணத்தைக்கொடுத்திருக்கலாம். சரத்பவாருக்கு திருப்பதி மாநாட்டில்ஏற்பட்ட தோல்வி (ஆறாவது முன்னணி நிலைகிட்டாமை 4 ஆம் இடம்) அரசியல் சூழ்நிலை கனிவடையும் வரையும் அவரைப் பொறுத்திருக்கச் செய்ததெனலாம். இந்நிலையில் தான் மூர்த்திகளில் ஒருவரான சரத்பவார் அரசியற் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தமது நிலைப்பாட்டை எடுத்து வருவதாகத் தெரிகின்றது

மத்திய பிரதேசதின் முன்னாள் முதல்வரான அர்ஜுன்சிங் பலமான அரசியல் அடித்தளத்தை மத்திய பிரதேசத்தில்கொண்டுள்ளதோடு, ஹிந்தி பேசும் மாநிலங்களில் தமது செல்வாக்கை அண்மைக்காலத்தில் வளர்த்துக்கொண்டுள்ளார் அரசியலில் சாணக்கியம் மிக்கவரெனவும், காங்கிரசின் சித்தாந்தவாதி எனவும் கூறப்படும் இவர் வட மாநிலங்களில் குறிப்பாக ஹிந்தி பேசும் மாநிலங்களில் பாரதீயஜனதாக் கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிர பங்கு பற்றுபவர். மதசார்பற்ற கொள்கையாளனாகத் தன்னைக்காட்டிக் கொண்டுள்ள அர்ஜுன்சிங், ஹிந்தி பேசும் மாநிலங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் ஒரு பகுதியினரையும், முஸ்லிம்களையும் ஒருங்கிணைத்து ஒரு முன்னணியை உருவாக்க முனைந்துள்ளார். பா ஜ க. க்கு எதிராக வலுவான ஒரு போராட்டத்தை நடத்த மூத்த காங்கிரஸ் தலைவர்கள் திராணியற்றிருக்கையில் அர்ஜுன்சிங்கின் பிரவேசம் உத்தர பிரதேசத்தில்காங்கிரஸ் உறுப்பினர் மத்தியில் அர்ஜுன்சிங்கிற்குகணிசமான செல்வாக்கை ஏற்படுத்தியும் உள்ளது. அத்தோடு ராஜீவின் ஆதரவாளர்களையும் தன்னோடு இணைத்துள்ள அர்ஜுன்சிங் சரத்பவாரையும் சேர்த்துக்கொள்வதில் அக்கறைகாட்டி வருகின்றார்.

இவ்வாறாக தனது அணியைப் பலப்படுத்திய அர்ஜுன் சிங் வெளிப்படையாக பிரதமர் நரசிம்மராவுடன் மோதுவதைத் தவிர்த்துக் கொண்ட போதும் அவரது கொள்கைகள் சிலவற்றை வெளிப்படையாக சாட முற்பட்டுள்ளார். இந்த வரிசையில் அயோத்தி விவகாரத்தில் பிரதமர் நரசிம்மராவ் பா.ஜ.க. யுடன் கடைப்பிடித்த சமரசப் போக்கைக் கண்டனம் செய்தார். பாபர்மசூதி இடிக்கப்படுவதற்கு முன்னரே அயோத்தி விவகாரம் தொடர்பாக நரசிம்மராவுடன் ஒரு மோதல் ஒன்றையும் நடத்தினார்.

கடந்த யூலையில் 'பா.ஜ.க. முடுக்கிவிட்ட வகுப்பு வாத படைகளின் சவால்களை எதிர்த்துப் போராடுவதற்கான தெளிவான நடவடிக்கையைத் தயார் செய்யத் தவறிவிட்டார்' என நரசிம்மராவின் அரசியற் செயலாளர் ஜிதேந்திரா பிரசாத்தைக் குற்றம் சாட்டி அர்ஜுன்சிங் கடிதம் ஒன்றை எழுதினார். நரசிம்மராவின் செயலாளருக்கு இக்கடிதம் எழுதப்பட்டிருப்பினும் இது நரசிம்மராவின் பதவி நாற்காலியைக் குறியாக வைத்தே மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் அர்ஜுன்சிங் திட்டமிட்டவாறு திரு. நரசிம்மராவை வெளிப்படையாக எதிர்ப்பதற்கு காங்கிரசில் உள்ள முக்கியமானவர்கள் முன்வரவில்லை. இதனால். அவரது முதல் முயற்சி தோல்வியில் முடிவடைந்தது என்றே சொல்லலாம். இதேவேளை அர்ஜுன்சிங்கின் பாரதீய ஜனதா தொடர்பான கொள்கையை கண்டனம் செய்த நரசிம்மராவ் 'ஆபத்திற்கு வழிவகுக்கும் முட்டாள்தனம்' எனச் சாடினார். ஆனாலும் அர்ஜுன் சிங் தன்து குறிக்கோளை கைவிடுவதாக இல்லை. இந்நிலையில்தான் பாபர் மசூதி இம்மாதம் ஆறாம் திகதி இடிக்கப்பட்ட போது அது அர்ஜுன் சிங்கிற்கு நரசிம்மராவைக் கண்டனம் செய்வதற்கும் தனது வாதத்தைப்பலப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமைந்தது.

''பாரதீய ஜனதாக் கட்சி ராவைக் கைவிடும்'' என தான் முன்னரே எச்சரித்திருந்ததைச் சுட்டிக்காட்டிய அர்ஜுன்சிங் பிரதமரின் கொள்கை தோல்வி அடைந்துவிட்டது எனச்சாடினார். மத அடிப்படைவாத அமைப்புக்களை தடை செய்வது மட்டும் போதாது. அவ் அமைப்புக்களுக்கு ஊக்கம் கொடுக்கும் அமைப்புக்களையும் தடைசெய்ய வேண்டும் என வற்புறுத்தினார். இதற்குக் கணிசமான ஆதரவை ஹிந்தி பேசும் மாநில எம்.பிகளிடம் அவர் பெற்றுக்கொண்டிருந்தார்.

ஆனால் ''ராவின் பார்வை ஏக கூர்மை என்பது தான் பிரச்சினை. ஒரு பிரச்சினையை இரண்டு பக்கம் மட்டுமல்லாமல் மூன்று, நான்கு பக்கங்களும் பார்க்கிறார். பிறகு காத்திருக்கின்றார்'' இதுவே நரசிம்மராவின் அரசியல் சாணக்கியமாகவுள்ளது. இதில், இந்தியாவிற்கு ஏற்படும் இழப்புக்கள் என்பது பெரிதாகவே இருப்பினும் ராவின் அதிகார நாற்காலிக்கு பங்கம் ஏற்படாமல் தவிர்ப்பதே முக்கியமானதாக உள்ளது.

டில்லி அரசியல் வட்டாரங்கள் பிரதமர் நரசிம்மராவின் 'இனிஷலுக்கு' புதிய விளக்கம் ஒன்று கொடுக்கப்பட்டு வருவதாக 'இந்திய ருடே' தெரிவிக்கின்றது. இதில் பி. என்பது 'பிறகு பார்ப்போம்' வி. என்பது 'விட்டு வைப்போம்' என அர்த்தப்படுத்தப்படுகிறதாம். ஆனால் நரசிம்மராவ் தனது அரசியல் சூத்திரமாக இதனையேகொண்டிருக்கிறார் போல் தெரிகின்றது.

விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடைசெய்ததிலிருந்து கர்நாடக முதலமைச்சர், பங்காரப்பா, ஆந்திர முதலமைச்சர் ஜனார்த்தனன்ரெட்டி ஆகியோரின் பதவிகளைப் பறித்ததில் இருந்து இதே கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தமையை அவதானித்தால் இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம் அதாவது. பொறுப்புக்களையும், பழிகளையும் நரசிம்மராவ் தான் ஏற்பதற்குப் பதிலாக மற்றவர்களின் தலையில் கட்டிவிடுவதே அவரின் அரசியல் தந்திரமாகும். நரசிம்மராவை இந்திய விமர்சகர்கள் சிலர் 'நழுவல் மன்னன்' எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால் அவரை ஒரு 'பொறியல் சக்கரவர்த்தி' என்று கூறின் மிகப் பொருத்தமாக இருக்கும். அதாவது விடுதலைப் புலிகள் தடைக்கும் தனக்கும் எதுவித சம்பந்தமும் இருப்பது போல காட்டிக் கொள்ளாமல் தமிழக முதல்வர் ஜெயலலிதாவினதும், தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியின் கொள்கைக்கு இணங்கவே தடைவிதிக்கப் பட்டதாகக் காட்டிக் கொண்டார். இதேபோன்றே கர்நாடக, ஆந்திர முதல்வர்களின் பதவி விலகல்களுக்கு தான் பொறுப்பல்ல, அவர்களின் நடத்தையும் ஊழலும் மாநில எம். எல். ஏ களின் விருப்பே காரணம் எனவும் காட்டிக் கொண்டார்

இன்று அயோத்தி விவகாரத்திலும் ராவ் இதே தந்திரத்தையே கடைப்பிடித்துள்ளார். பாபர் மசூதியை இன்று அடிப்படைவாதிகள் இடிக்கும் வரை மௌனமாக இருந்த நரசிம்மராவ் மசூதி இடிக்கப்பட்டதும் அரசியற் சாசன சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு உத்தரப் பிரதேச அரசைக் கலைத்ததோடு, மத அடிப்படைவாத இயக்கங்களையும் தடை செய்தார். இதன்மூலம், பா ஜ க ஒரு வகுப்புவாதக் கட்சிஎனவும், அதுஇந்தியாவின் தேசிய நலனுக்குஊறுவிளைவிக்கக் கூடியது என்பதையும் வெளிக்காட்ட முற்பட்டார். மத அடிப்படைவாதிகள் மீது நரசிம்மராவ் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையானது, பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்குப் பொறுப்பேற்று பிரதமர் நரசிம்மராவ் பதவிவிலக வேண்டும் என்று கோரிக்கைவிடுத்த இடதுசாரிக்கட்சிகளினாலும் தேசிய முன்னணியினாலும் வாயை அடைத்துவிடும் அளவிற்கு இருந்தது

இதேவேளை உத்தர பிரதேசம் தவிர்ந்த பா. ஜ. க. ஆட்சி செய்த ஏனைய மாநிலங்களின் அரசாங்கங்கள் கலைப்பது தொடர்பாக நரசிம்மராவ் எதுவித முடிவையும் உடன் எடுக்கவில்லை.

இதேவேளை நரசிம்மராவின் இப்போக்கு காங்கிரசிற்குள் அவருக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது அரிய சந்தர்ப்பம் தவறவிடப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. அர்ஜுன்சிங் போன்றவர்கள் இதற்குப் பின்னால் இருந்தனர். நரசிம்மராவ் இதனை எதிர்க்கவில்லை. இந்நிலையில் பாரதீய ஜனதாக்கட்சி பலமாகவுள்ள உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், இமாலயப் பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா போன்ற மாநிலத்திலுள்ள காங்கிரஸ் தலைவர்கள் குறிப்பாக அர்ஜுன் சிங் தலைமையிலுள்ளவர்களும், சரத்பவார் தலைமையிலுள்ளவர்களும் பாரதீப ஜனதாக் கட்சி ஆட்சி புரியும் மாநிலங்களின் ஆட்சியைக் கலைத்து விட வேண்டும் என அமைச்சரவையில் வற்புறுத்திய போது பிரதமர் ராவ் அதற்குப் பணிந்து போவதாகக் காட்டிக் கொண்டார் பா.ஜ.க. ஆட்சி நடைபெற்ற மாநில ஆட்சிகளைக் கலைத்துவிட அமைச்சரவை முடிவுசெய்தது.

அதாவது, நரசிம்மராவ் இவ் விடயத்திலும் தனது அரசியல் சாணக்கியத்தின் மூலம் காங்கிரஸ் கட்சியிலுள்ள தமது அதிருப்தியாளர்களை ஒரு பொறியினுள் சிக்க வைத்தார். பா. ஜ. க. யின் பலம் அதிகமாகவுள்ள ஹிந்தி பேசும் மாநிலங்களில் எதிர்காலத்தில் உருவாகும் அரசியல் விளைவுகளுக்கும், காங்கிரஸ் எதிர்கொள்ளும் சவால்களுக்கும் அர்ஜுன்சிங் போன்றவர்களே பொறுப்பேற்க வேண்டிய நிலையை இதன்மூலம் உருவாக்கினார்.

இந்தியாவின் வடக்கிலோ, தெற்கிலோ அன்றி கிழக்கிலோ, மேற்கிலோ பலமான அரசியல் அடித்தளத்தைக் கொண்டவரல்ல நரசிம்மராவ். ஆனால், நீண்ட அரசியல் அனுபவமும், இந்திரா காங்கிரஸ் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளையும் நன்கு உணர்ந்தவர் இதனால், நரசிம்மராவ் கடைப்பிடிக்கும் பொறுமை, காலம்கடத்துதல் என்பது தனக்குச் சாதகமான அரசியல் சூழ்நிலையை எதிர்பார்த்திருத்தலே ஒழிய அவர் விடும் தவறு எனக்கொள்ள முடியாது.

ஆனால், நரசிம்மராவும். முன்னைய இந்தியப் பிரதமர்களைப்போலவே இந்தியா எக்கேடு கெட்டாலும், அதிகார நாற்காலியைப் பாதுகாக்க எந்த வகுப்புக் கலவரத்தையும் இந்தியாவில் உருவாக்கத் தயங்கப் போவதில்லை என்பதையே பா ஜ க. ஆட்சி புரிந்த மாநில அரசாங்கங்களைக் கலைக்க அவர் ஒப்புக் கொண்டதிலிருந்து தெரிய வருகிறது.

- ஜெயராஜ்

## கூட்டம்

நாளை காலை 10.00 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைமையகத்தில் சர்வதேச செஞ்சிலுவைக்குழு பற்றி சிறப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதற்கு உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அன்று பிற்பகல் 2.00 மணிக்கு வைத்தியசாலைத் தொண்டர்களுக்கான கருத்தரங்கும் செய்முறையும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினால் நடாத்தப்படவுள்ளது செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் இதற்கு அழைக்கப்படுகின்றனர்.

## மீட்பு நிதி சேகரிப்பு

### 18 - 12 - 1992 ( இன்று)

(தென்மராட்சி)

| இடம் | காலம் |
|---|---|
| 1. நாவற்குழி மகாவித்தியாலயம் | காலை 8.00- 8.45 |
| 2. கைதடி பூத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் | காலை 9.00-10.30 |
| 3. மட்டுவில் மகாவித்தியாலயம் | காலை 10.45-11.45 |
| 4. சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம் | மாலை 1 00- 2.00 |
| 5. வறணி மகாவித்தியாலயம் | மாலை 2.15- 3.00 |
| 6. கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | மாலை 3 15- 4.15 |
| 7. பளை மகாவித்தியாலயம் | மாலை 4 45- 5.45 |

### 19 - 12 - 1992 ( நாளை )

( வடமராட்சி )

| | |
|---|---|
| 1. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | காலை 8 00- 10.30 |
| 2. நெல்லியடி மகாவித்தியாலயம் | காலை 11.00- 1.00 |
| 3. பருத்தித்துறை வடஇந்துமகளிர் கல்லூரி | மாலை 2. 00- 5.00 |

### 20 - 12 - 1992 ( நாளை மறு தினம் )

( வலிகாமம் )

| | |
|---|---|
| 1. நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி | காலை 9 00- 3.00 |
| 2. மல்லாகம் மகாவித்தியாலயம் | மாலை 3 30- 4.15 |

## உதைபந்தாட்ட போட்டி

மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு அரங்கில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. இன்றைய போட்டிகளில் அளவெட்டி யுத் விளையாட்டு கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை யங் றோயல் விளையாட்டு கழகமும் திருமலை நட்சத்திர விளையாடடு கழகத்தை எதிர்த்து ஞானகலா விளையாட்டு கழகமும் விளையாடவுள்ளன. இப்போட்டி இன்று மாலை 2 30 மணிக்கு ஆரம்பமாகும்.

## மண்ணெய்

கம் இராணுவ அதிகாரியின் அனுமதிக் கடிதம் இல்லாததால் லொறிகள் தடுத்து வைக்கப்படடிருக்கின்றன.

இதேவேளை மண்ணெண்ணெய் விநியோகத்தர்கள் குறிப்பிட்ட மண்ணெண்ணெய் எடுத்துவர அனுமதி தேவையில்லையெனவும அனுமதி இன்றி முன்னரும் இம்மாவட்டங்களுக்கு மண்ணெண்ணெய் எடுத்துவரப்பட்ட போதிலும் தற்போது இராணுவததினர் புதுவித கெடுபிடி ஒன்றை உண்டுபண்ணி தடுதது வைக்கப்பட்டிருப்பதாகவும் முல்லைத்தீவு செயலக தலைமை அலுவலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் சுந்தரன் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

இன்று பிற்பகல் 3.00 மணிக்கு அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் ''விவசாயத்தின் முக்கியத்துவம்'' என்றதலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது என்பதைசகல மாணவர்களுக்கும் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு. மருதனார்மடக் கல்விக் கோட்டத்தினர் அறியத் தருகின்றார்கள்.

## தனித்தனி

பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்கு, கிழக்கு தனித்தனிச் சபைகள் என்ற அதன் முடிவுகளைக்கொண்ட பரிந்துரையை அடுத்த மாதத்தில் சமர்ப்பிக்க உள்ளது. பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைய தெரிவுக்குழு தன் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் என்று அதன் தலைவர் மங்கள முனசிங்கா குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் தெரிவுக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளைத் தெரிவிக்கும் கடிதம ஒன்றை சபாநாயகர் எம் எச்.எம். முகமட்டுக்கு எழுதியுள்ளார்.

வடக்கு, கிழக்கு இரண்டு தனித்தனி மாகாணங்களாகக் கருதி இரண்டு சபைகளை அமைப்பதற்கும், நிர்வாகத்தில் இந்தியாவில் இருப்பதைப் போல் அதிகாரப் பரவலாக்கத்தைக் கொண்டு வருவதற்கும், குழுவில் அங்கம் வகிக்கும் ஐ தே. கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இடது சாரிகளான கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சம சமாசக் கட்சியும் இணங்கியுள்ளன.

## மாநில அரசு கலைப்பு பத்திரிகைகண்டனம்

(டில்லி)

மத்தியப் பிரதேஷ், ராஜஸ்தான் மற்றும் இமாலயப் பிரதேசத்திலுள்ள பாரதீய ஜனதாக் கடசி அரசுகளைப் பிரதமர் நரசிம்மராவ் கலைத்தது ஜனநாயக விரோதமானது என்று இந்திய முன்னணிச் செய்தித்தாள்கள் பிரதமர் நரசிம்மராவைக் கடுமையாக விமர்சித்துள்ளன.

நரசிம்மராவின் இச்செயல் ஒரு அரசியல் தவறு என்றும் இந்திய செய்தித்தாள்கள் கண்டித்துள்ளன.

இம்மாதம் 6 ஆம் திகதி பாபர் மசூதி தகர்க்கப்பட்ட பிறகு முதல்முறையாகச் செய்தித்தாள்கள் இந்துமத அடிப்படைவாதக்கட்சிகளுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## குடும்ப

இதுவரை பதிவு செய்யாதவர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும், மீளாய்வு செய்யாதவர்களை மீளாய்வு செய்து கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றனர்.

பதிவுகளை மீளாய்வு செய்யத் தவறுவோர் நிர்வாக ஒழுங்குகளின்போது சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பயிற்சிக்கு

அடையாள அட்டையையும் தவறாது எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்களும் பரீட்சைக்குத் தோற்றாதவர்களும் தமது பெயர்களை பதிவுசெய்தலாகாது. எனவும் அவர் தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 17.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7145


வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

26-4139, 22-7271, 41-0976, 27-1531, 26-3068, 26-3741

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

24-7628, 28-1110, 26-2135, 24-5416, 22-2087, 28-0799, 27-9416, 24-5140, 24-6431, 42-2432, 40-1188.

# மன்னாரில் வீரச்சாவடைந்த முதல் மாவீரன்



18 - 12 - 1984 அன்று மன்னார் பரப்புக்கடந்தானில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் முற்றுகையின்போது எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற இயக்கத்தின் விதிமுறைகளுக்கிணங்கத் தன்னைத்தானே சுட்டு வீரச்சாவடைந்த தற்கொடையாளன்

## லெப். நிதி ( கிறிஸ்துநாதன் சுதாகர் பனங்கட்டிக்கொட்டு, மன்னார். )

பிறப்பு : **29 - 11 - 1959**

வீரச்சாவு : **18 - 12 - 1984**

நிதியாகி, மன்னாரின் நினைவாகிப் போனாய்.
நீயன்று விதையாகி, நிழலாக ஆனாய்.
புதிதாக விளைகின்ற புலிவீரர்க்குள்ளே,
பூகம்பப் பொறியாக ஆரம்பம் ஆனாய்.
மன்னாரின் மடிசாய்ந்த முதல்வேங்கை மறவா!
மங்காது உன்நாமம் என்நாளும் நெஞ்சில்
விண்ணாளும் புலிவீரா! உன் கனவை நாங்கள்
விரைவாக நனவாக்கித் தமிழீழம் காண்போம்.

**நிதியே! உன்னை எம்நெஞ்சம் மறக்காது**

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

## லெப். நிதி

- மன்னார் தொடர்பகம்

(சி-5602)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.